www.tamilarangam.net

# தூண்டில்

Tamilische Zeitschrift




உள்ளே....


* காணாமற் போகும் பெண்கள் *

* பிச்சை *

* திரைப்பட விமர்சனம் *

* மாவீரர் விழா *

* காயங்கள் *

* தேடிடும் நண்பர்களுக்கு

* இன்னொரு துரோகம் *


* மனித உரிமைகள் வியாபாரம் *

* ஏன் எதிரிகள் ஆனோம்? *


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காயீன்கள்



கிழக்கைச் சிவக்க வைத்தோம்.
இருளின் ஆள்கையில்
இரத்தத்தால்.

ஓ... பிதாவே!
பிதாவுக்கும் பிதாவே!
இரட்சணியத்தின் உறைவிடமே!
ஐம்பத்து மூன்று மணிகளை உருட்டி
உமது
ஜெபவேளை முடியுமுன்பே
பள்ளியிலிருந்த ஆபேல்களின்
தொழுகைக் குரல்கள்
பரலோகம் நோக்கி
உமது செவிகளை
கூக்குரல்களாய் எட்டிடச் செய்தோம்.

என் பிதாவே!
ஆபேலின் குடும்பத்தினரையும்
முலை சூப்பிய பச்சைக் குழந்தை உட்பட
உமது திருப்பாதங்களில்
பலியிட்டோம்.

குல்லாத் தலைகள் சீவி
மொட்டை பறிந்த வாட்களை
அடுத்த வேட்டையின்
கட்டளை பிறக்குமுன்
தீட்டித் தருக ஆண்டவரே, ஆள்பவரே.

துப்பாக்கிப் பீரங்கிகளாலும்,
கத்தி, வாள், பொல்லு, தீயாலும்
மானுடத்தைச் சாகடித்தல்
சலித்துப் போயிற்று

மானுடத்தின்
முகத்தைப் பிராண்டி
குரல்வளையின் மூடிச்சைக்
கடித்துத் தின்று
வயிற்றைப்
பற்களால் கிழித்துக் குடலெடுத்து
ஈரலையும் உண்பதற்கு
பிதாவே உமது
அனுமதி வேண்டுகிறோம்.
அதுவும் இப்பொழுதே.

இருட்டில் சிவந்து கிடக்கும்
கிழக்கிலேயே
ஆரம்பித்துவிட அனுமதி வேண்டும்.

ஆமீன், அக்பர்.
நெளபியா, ஷெரிஸாவிலிருந்தே
தொடங்கி விடுகிறோம்.

சலித்துப் போயிற்று ஆண்டவரே
சலித்துப் போயிற்று.
மானுடத்தை
ஆயுதங்களால் சாகடித்தல்
சலித்தே போயிற்று.
கட்டளையிடுங்கள் தந்தையே
காத்திருக்கிறோம் பணிமுடிக்க.

* தமயந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டோம் கேட்டோம் உரைத்தோம்

# காணாமல் போகும் பெண்கள்

தென்னிலங்கையில் 3 மாத காலத்தில் (ஏப்ரல்`92-யூன்`92) ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களும், சிறுவர்களும் "இனந்தெரியாதோரால்" கடத்தப்பட்டுள்ளனர். இதுவரை கடத்தப்பட்டவர்கள் குறித்து 874 புகார்கள் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 11-16 வயதிற்கிடைப்பட்ட இளம் பெண்களின் தொகை 462. ஏனையோர் சிறுவர்கள்.

இவர்களை யார் கடத்தினார்கள்?
ஏன் கடத்தினார்கள்?
கடத்தப்பட்டவர்கள் எங்கே?
அவர்களுக்கு என்ன நடந்தது?

இந்தக் கேள்விகளுக்கு இன்றுவரை எந்தப் பதில்களுமே இல்லை!!

இக் கடத்தல்கள் பற்றிப் பொலிஸில் புகார்கள் கொடுக்கப்பட்டும், கடத்தப்பட்டவர்கள் பற்றி எந்தத் தகவலும் இல்லை என்று பொலிஸ் திணைக்களம் கைவிரித்துள்ளது!. இத்துடன் பொலிஸ் தனது "கடமை"யை நிறுத்திக் கொள்ளவில்லை. பெண்கள், பிள்ளைகள் கடத்தப்படுகிறார்கள் என்ற செய்தி உண்மையில்லை என்றும், இது வெறும் வதந்தியே என்றும் தீவிர பிரச்சாரம் செய்து வருகிறது. இங்கேதான் எங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

கடத்தல் செய்திகள் வெறும் வதந்திகளல்ல என்றும், இவற்றைப் பொலிஸ் திணைக்களம் வதந்திகள் என்றும் நிராகரித்த காலப் பகுதியில் மட்டும் 300 இளம் பெண்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் என்று "அத்த" பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டது. இதற்கான புகார்கள் பொலிஸில் எழுத்து மூலமாகக் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் அது குறிப்பிட்டது.

இச் செய்தி வெளியான மறுநாளே உயர் பொலிஸ் அதிகாரிகளின் குழுவால் தொலைக் காட்சி, வானொலி, அரச பத்திரிகைகள் மூலமாக மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. பெண்கள் கடத்தப்படுகிறார்கள் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும், இதைப் பற்றிக் கதைப்பவர்கள், செய்தி வெளியிடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் உத்தியோகபூர்வமாக அக் குழு மிரட்டியது. அத்துடன் நின்றுவிடாமல் பெண்கள் கடத்தப்படுவது பற்றிக் கவலைப்படுபவர்கள், பயப்படுபவர்களைக் கைது செய்ய பெருமளவு சி.ஐ.டி.யினர் மக்கள் மத்தியில் உலா வந்தனர்.

"அத்த" பத்திரிகையிடம், அது வெளியிட்ட செய்தி தொடர்பான ஆதாரத்தைப் பொலிஸ் திணைக்களம் கேட்டது. இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் பொலிஸ் செய்திகளிலிருந்தே கடத்தப்பட்டவர்களின் தொகையைத் தொகுத்ததாக "அத்த" பதிலளித்தது. இச் செய்தி வெளியான அன்றிலிருந்து இலங்கை வானொலியில் தினமும் இரவு 11 மணிக்கு ஒலிபரப்பப்பட்டு வந்த "பொலிஸ் செய்திகள்" எனும் நிகழ்ச்சி முற்றாக நிறுத்தப்பட்டது.

கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று உறுதியாகத் தெரியாத போதிலும், கிடைக்கப் பெற்ற உறுதியான சில தகவல்களை அடிப்படையாக வைத்துக் கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்திருக்கலாம் என நாம் ஊகிக்கலாம்.

தென்னிலங்கையின் பல பாகங்களிலும் புதையல் தேடும் படலம் ஆரம்பமாகியுள்ளது. பழைய சரித்திரக் குறிப்புகளை வைத்துக் கொண்டு பலர் புதையல் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களினால் புதையல் பலிக்காக சிறுவர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சில அரசியல்வாதிகளின் நலன்களுக்காக பூசாரிகளினால் விசேட பூசைகள் நடத்தப்படுகின்றன. இதற்காக சிறுவர்கள், இளம் பெண்கள் கொல்லப்பட்டு, அவர்களின் இரத்தத்தால் அபிஷேகம் செய்யப்படுவதாக கிராம மட்டங்களில் கதை அடிபடுகிறது.

இந்தியாவிலுள்ள மலையாள மாந்திரீகர்களின் ஆலோசனையின் பேரில் இளம் பெண்களின் பாலைத் தொட்டியில் நிரப்பி பிரேமதாசா நீராடுவதாக சில காலங்களுக்கு முன் பத்திரிகைளில் வெளியான செய்திகளை ஆதாரங் காட்டி எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் இதைப் பற்றிக் கதைத்துள்ளன.

பிரேமதாசாவின் பாற் குளியலுக்காகக் கடத்தப்பட்ட பெண்கள் பின்னர் கொன்று புதைக்கப்படுகிறார்களாம்.



மலையாள மாந்திரீகர்களிடம் ஆலோசனை பெறுவதற்காகவும், விசேட பூசைகளுக்காகவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் விசேட விமானத்தில் இந்தியாவுக்குப் பறக்கிறார் பிரேமதாசாவின் செயலாளர் பாஸ்கரலிங்கம். இவரின் இந்தியப் பயணங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் கேட்டபோது பிரேமதாசாவும், யூ.என்.பி.யினரும் சரியான பதிலளியாது மழுப்பி விட்டனர்.

பிரேமதாசாவின் பாற் குளியல் பற்றியும், பாஸ்கரலிங்கத்தின் வாராந்தர இந்தியப் பயணங்கள் பற்றியும் செய்தி வெளியிட்ட "ராவய" பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவனும், வேறு பத்திரிகையாளர்களும் பிரேமதாசாவின் குண்டர்களினால் மிரட்டப்பட்டுள்ளார்கள்.

இந்த ஊகங்களை கீழ்வரும் கேள்விகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன:

1. பொலிஸில் 874 புகார்கள் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டும், இப்படியான கடத்தல்களைப் பொலிஸ் தொடர்ந்து மறுத்து வருவது ஏன்? இதைப் பற்றிக் கதைப்பவர்களைக் கைது செய்வது ஏன்?

2. கடத்தல்கள் குறித்த பீதி மக்கள் மத்தியில் பரவியிருக்கையில், கடத்தப்பட்டவர்களைக் கண்டு பிடிக்கும் எந்த நடவடிக்கையிலும் அரசு ஈடுபடாதது ஏன்?

3. பாஸ்கரலிங்கத்தின் வாராந்தர இந்தியப் பயணத்திற்கு அரசு காரணம் தெரிவிக்காதது ஏன்?

கண்களைத் தோண்டியெடுத்து விற்பதற்காக மனிதர்களைக் கடத்திக் கொலை செய்கின்ற

பூசைக்காகவும், பாற் குளியலுக்காகவும் இளம் பெண்களைக் கடத்திக் கொல்லுகின்ற –

பிரேமதாசா என்ற பேய் அரசு தொடர்ந்தும் ஆட்சியில் இருக்குமானால்...?

* ரா.சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# தேடிடும் நண்பர்களுக்கு !



இரவு வேளைகளில்
வானத்து நட்சத்திரங்களை
தேடுகையில்,
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
சிதறியபடியே சில.
இங்கு இயற்கையும் கூட
சலிப்பை ஊட்டும்.
தேடலும், ஓடலுமாய்
எத்தனை காலம்தான்..?
தேடலில் தொடங்கி
தேடிய பொருள் மறந்து...

சூரியனைப் பறிகொடுத்த
இலையுதிர் காலத்தில்,
ஜேர்மன் நாட்டினில்
இனவெறிக் கொலைகள்.
அன்று கொல்லப்பட்டோரின்
சாம்பலும், கறலும்
இன்றும் கூட
காற்றில் மணக்கிறதே.
எங்கே மனிதர்கள் ?
வரலாற்றிலிருந்து
எதைத்தான் கற்றனர் ?

சிறுபான்மையினர்க் கெதிராய்
அடக்குமுறை என
எழுந்த நம் போராட்டம்
முஸ்லீம் மக்களை
அடித்துத் துரத்துவதும்,
கொலை செய்வதுமாய்
நிர்வாணம் அடைந்தபோது,

சிரித்துப் பேசியே
நியாயம் பேசிய ஒருவர்
இன்று சொல்கிறார்
அஞ்ஞூறு வருச பாபர் மசூதியை
நொருக்கிப் போட்டாங்கள் ;
இந்தியச் சனங்கள்
குப்பைச் சனங்களாம்!

வரலாற்றிலிருந்து
எதைத்தான் நாம் கற்றோம்?
என்னத்தை நான் சொல்ல?
தேடலில் ஈடுபடும்
நண்பர்களைத் தேடுகின்றேன்.
அவர்களோ மூழுமூச்சாய்
எதையோ தேடியபடி...!
ஊரினில் உலகினில்
ஆயிரம் நடக்கட்டும்,
எமக்கென்ன ?
தேடும் பொருள் மறந்து
தேடலில் நாம் திளைப்போம்.

பள்ளிப் பாடலொன்று
எனக்கும் சேர்த்து
இங்கே சமர்ப்பணம்:
என்ன பிடிக்கிறாய் அந்தோனி?
எலி பிடிக்கிறேன் சிஞ்சோரே!
பொத்திப் பொத்திப் பிடி அந்தோனி.
பூறிக் கொண்டோடுது சிஞ்சோரே.

* ராகவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் விழா

*"பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே - மழை
பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
மங்களம் தங்கிடும் நேரத்திலே - நம்
மன்னவன் பிறந்தான் ஈழத்திலே.."*

1989இலிருந்து நவம்பர் மாதத்தில் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மாவீரர் நாள் தமிழ்ப் பகுதியெங்கும் (இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசம் தவிர) கொண்டாடப் படுகின்றது. இதற்கான உண்மைக் காரணம் என்னவென்றால் புலிகளின் தலைவன் பிரபாகரனின் பிறந்த தினம் நவம்பர் 26ஆம் திகதியாகும்!

1989இல் இந்திய இராணுவம் தமிழ்ப் பகுதியெங்கும் அதிகாரம் செலுத்தியபோது வன்னிக் காட்டுப்புறங்களில் மாவீரர் விழா கொண்டாடப் பட்டது. 1990இல் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. கோட்டையிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேறிய பின் கோட்டையிலும் விழா கொண்டாடப்பட்டது. மாங்குளத்தில் பல இளம் குருத்துகள் மடிந்து கொண்டிருந்த தருணங்கள் அவை. பெருமழை பெய்து மாங்குளக் காடுகள் யாவும் வெள்ளமாக நிரம்பிக் கொண்டிருக்கிற நேரத்தில், மாங்குளம் இராணுவ முகாம் புலிகளினால் தகர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கணங்களில் மாவீரர் நாள் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

ஆனால் இது தம் தலைவனின் பிறந்தநாள் கொண்டாட்டம்தான் என்பது புலிப் போராளிகளுக்குத் தெரிந்தேயிருந்தது!!

மாவீரர் விழாவுக்காக ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே மக்களிடமிருந்து பெருந்தொகையான பணம் அறவிடப் படுகின்றது. (என்னிடமிருந்து ஆயிரம் ரூபா வாங்கப்பட்டது) பின்னர் நகரெங்கும், கிராமமெங்கும் விழாக்கோலம்தான்.

புலிகளின் பிரதேசப் பொறுப்பாளரால் இப்படி அறிவிக்கப்பட்டது: "எல்லா இடமும் புலிக்கொடிகளினாலும், புலிகளின் நிறமான மஞ்சள், சிவப்பு வர்ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். கோயில்களிலும், வயல்களிலும் புலிக்கொடி பறக்க வேண்டும். நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. காடுகளில் கூடப் புலிக்கொடி பறக்கும்."

இந்த எச்சரிக்கைக்குப் பிறகு எங்கும் புலிக்கொடிகள் பறந்தன. கொடிகள் பறக்காத வீடுகள் துரோகிகளின் வீடாக கருதப்படும் என்பது யாவரும் அறிந்ததே.

அனைத்துப் பாடசாலைகளும், சனசமூக நிலையங்களும், ஏனைய நிறுவனங்களும் 21ஆம் திகதி காலை 8 மணிக்கு கொடியேற்ற வேண்டும். 26ஆம் திகதி மாலை 6 மணிக்கு அதனை இறக்குதல் வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை 8 மணிக்கு அஞ்சலி செலுத்த வேண்டும். மாவீரர்களைப் புகழ்ந்து சொற்பொழிவாற்ற வேண்டும்! 26ஆம் திகதி சாமம் 12 மணிக்கு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியாக 2 நிமிடம் கோயில்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் மணிகள் அடிக்க வேண்டும். அந் நேரத்தில் யாவரும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்த வேண்டும். ஒவ்வொரு வீடு, பாடசாலை, சன சமூக நிலையம் ஆகியவற்றின் முன்னால் தீபங்களும் ஏற்றப்பட வேண்டும்.

மற்றொரு முக்கியமான நிகழ்ச்சி இதுதான்: ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவீரர் ஆனோரின் பெற்றோர்கள், சகோதரர் ஆகியோர் இறுதி 2 நாட்களிலும் புலிகளினால் உபசரிக்கப்படுவார்கள். அவர்களுக்கென்று ஒரு இடத்தை நிர்மாணிப்பார்கள். அதன் அருகில் அம் மாவட்டத்தில் மாவீரர் எண்ணிக்கையின் அடிப்படையில் கம்பங்கள் நாட்டப்பட்டு, 26ஆம் திகதி இரவு சரியாக 12 மணிக்கு மாவீரர்களின் பெற்றோரினால் மாவீரர் தீபம் ஏற்றப்படும். அது தொடர்ந்து எரிந்துகொண்டிருக்க வேண்டும்.

இக் கணங்கள் உண்மையில் காவியச் சோகமானவை. நவம்பர் மாதம் தமிழ்ப் பிரதேசங்களில் மழைக் காலம். ஓயாது பெய்துகொண்டிருக்கும் மழை. குளிரில் விறைத்தபடி, மழையில் நனைந்துகொண்டு மக்கள். மின்சாரம் இல்லாத பிரதேசம். மழையில் தீபங்கள் அணைந்து விடும். மெலிந்துபோன தாயோ, தகப்பனோ, அக்காவோ தன் நடுங்கும் விரல்களால் தீபத்தை ஏற்றத் துடிக்கிற துடிப்பு, அது அணைந்து விடாமல் பாதுகாக்கிற உணர்வு, கண்ணீர் ஒழுக, விம்மி வெடித்தபடி கரைகிற மனது .... இவை போராட்டத்தை யிட்டு ஏக்கம் கொள்ள வைக்கின்றன.




ஒரு சிலர் மாத்திரமே தமது அதிகார வெறியில் ஏராளமானவர்களைப் பலியிட – போராட்டத்தை அடகு வைக்க – உணர்வு கொண்டவர்கள் வாய்மூடி மௌனியாக, பலர் தாய்த் தேசத்தை விட்டு ஓட..... குறிப்பிட்ட சிலர் மட்டும் அதிகார வெறியில் தமது மாவீரன் (பிறந்த) நாளை கொண்டாட... இதுதான் மாவீரர் விழா!

மாவீரர்கள் யார் என்பதைப் புலிகள்தான் தீர்மானிக்கிறார்கள். மக்களுக்கும், அவர்களது விடுதலைக்குமாக உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற மக்களின் உணர்வு கொச்சைப்படுத்தப்படுகிறது. சுதந்திரமான அஞ்சலி செலுத்தல் துரோகமாகிறது. உணர்வுக்குப் பதில் அச்சம் காரணமான செயற்பாடுதான் முடுக்கி விடப்படுகிறது.

புலிகளால் மறைக்கப்பட்ட, கொல்லப்பட்ட மாவீரர்களைக் காலம் குறித்துக் கொள்ளுமா...?

* முரளிகிருஷ்ணா (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித உரிமைகள் வியாபாரம்!

மனித உரிமைகள் கார் ரயரில் கொளுத்தப்பட்டும், வதைமுகாம்களில் சங்கிலிகளால் கட்டப்பட்டும் உருச் சிதைந்துபோன தேசத்தில், மனிதர்களுக்காகக் கறுப்புக் கோட்டுப் போடும் சட்டத்தரணி கல்யாணந்த திரணகமவை ஜேர்மனியில் சந்தித்தேன். மனிதர்களையும், உரிமைகளையும் காசாக்கும் நாளில் எதுவித காரணங்களுமின்றி வருடக்கணக்காகச் சிறைகளில் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படும் அப்பாவிகளை விடுவிக்க காசு வாங்காமல் உழைக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சட்டத்தரணிகளில் கல்யாணந்த முக்கியமானவர். இலங்கையில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை வெளியுலகிற்குக் கொண்டுவரும் பயணத்தில் இங்கு வந்தவரிடம் எனது கேள்விகளை ஆரம்பிக்கிறேன்.

*?: இலங்கை அரசு பற்றியும், பிரேமதாசா பற்றியுமான தென்னிலங்கை மக்களின் அபிப்பிராயம் என்ன?*

!: மக்கள் வெறுக்கிறார்கள். 15 வருடங்களாகத் தொடரும் இந்தக் காட்டு ஆட்சியிலிருந்து விடுபட மக்கள் விரும்புகிறார்கள். ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். இது குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினரிடம் என்றில்லாமல் எல்லாரிடமும் இருக்கிறது. மக்களால் தாங்கமுடியாதளவுக்கு இந்த அரசால் தொடர்ந்து சுமைகள் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. மக்கள் மட்டுமல்ல, இராணுவம், பொலிஸ் மற்றும் அரசசேவை உத்தியோகஸ்தர்கள் என்று அனைவரும் இந்த ஆட்சியையும், பிரேமதாசாவையும் வெறுக்கிறார்கள்.

*?: இப்படியான வெறுப்பு பரவலாக இருக்கையில் பிரேமதாசாவால் எப்படி ஆட்சியைத் தொடர முடிகிறது?*

!: அரசுக்கு எதிரான பலமான ஒரு சக்தி நாட்டில் இல்லை. எதிர்க்கட்சிகள் துண்டு துண்டாகப் பிளவுபட்டிருக்கின்றன. கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும், இடதுசாரிகளும் பலவீனமான நிலையில் உள்ளார்கள். இந்த நிலையில் அரசுக்கு யாரும் ஒரு பொருட்டாக இல்லை. தனிக்காட்டு ராஜாவாக ஆட்சி நடக்கிறது.

*?: முதலில் சொன்னீர்கள் அரச பாதுகாப்புப் படைகளும் அரசை வெறுக்கின்றன என்று. அப்படியானால் இராணுவம் அரசைக் கைப்பற்றும் நிலை இருக்கிறதா?*

!: இல்லை. கீழ்மட்டத்திலுள்ளவர்கள் மத்தியில் தான் இந்த அதிருப்தி இருக்கிறது. உயரதிகாரிகள், மேல்மட்டம் எல்லாம் பிரேமதாசாவின் விசுவாசிகளே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*?: கொம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள் பலவீனமாக உள்ளார்கள் என்று கூறினீர்கள். இதற்கு சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் காரணமில்லை என்று வாசுதேவா தூண்டிலுக்கான நேர்காணலில் சொல்லியிருக்கிறாரே?*

!: இது உண்மையல்ல. கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதைவிட காலத்துக்குக் காலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இவர்கள் ஏற்படுத்தும் கூட்டு மக்கள் மத்தியில் அவநம்பிக்கையையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இடதுசாரிகளிடையேயிருந்த அனுபவம் வாய்ந்த தலைவர்கள் இறந்துவிட்டார்கள். இதுவும் கூட பலவீனத்துக்கான காரணமாக இருக்கலாம்.

*?: மனித உரிமை மீறல்கள் விடயமே இன்று இலங்கையில் பெரிதாக அடிபடுகின்றது. இதில் எந்தளவில் முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது?*


!: எந்த முன்னேற்றமும் இல்லை. மனித உரிமையைப் பற்றிக் கதைப்பதே இன்று வியாபாரமாகியுள்ளது. பலர் தங்களுக்குப் புகழ் சம்பாதிக்கவே இதில் ஈடுபட்டுள்ளார்கள். மனித உரிமைகள் பற்றி அறிக்கைகள் மட்டுமே வெளியிடக் கூடியதாகவுள்ளது. மறுபக்கத்தில் கடத்தல், கொள்ளைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. அதுவும் பகிரங்கமாகவே. பொலிஸாலோ, இராணுவத்தாலோ கைது செய்யப்படும் ஒவ்வொருவரும் கடுமையாகச் சித்திரவதை செய்யப்படுகிறார்கள். பலர் இந்தச் சித்திரவதைகளின்போதே இறந்துவிடுகிறார்கள். அல்லது விடுதலை செய்யப்பட்ட பின்னர் சித்திரவதைகளின் பாதிப்புகளினால் இறந்து விடுகிறார்கள். 3 வருடங்களுக்கு மேலாக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தடுப்பு முகாம்களில் எந்தவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இப்படித் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 5,560 பேர் சிங்களவர். இவர்களில் பெரும்பாலானவர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான எந்த அரசியற் பின்னணியும் இவர்களுக்கு இல்லை. சிலவேளைகளில் தடுப்பு முகாமிலுள்ளவர்கள் நீதிமன்ற விசாரணைகளுக்கு கொண்டு வரப்படும் அதிசயமும் நிகழ்வதுண்டு. எனினும் விசாரணை முடிவில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தாலும், அந் நபர் திரும்பவும் தடுப்பு முகாமுக்குக் கொண்டுபோய் அடைத்துவைக்கப்படுவார். இதுதான் இலங்கையில் நீதியின் நிலை.

*?: இவ்வளவும் நடக்கின்றபோது நீதிமன்றங்களிலோ, சட்ட விசாரணைகளிலோ மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?*

!: இல்லை. ஆனால் மக்களுக்கு வேறு வழியும் இல்லை. ஜனாதிபதி தேர்தல் மோசடி வழக்கின் தீர்ப்பு பிரேமதாசாவுக்குச் சாதகமாக வழங்கப்பட்டதில் பலர் கோபமடைந்துள்ளார்கள். தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளை "எருமைகள்" என்று பலர் பகிரங்கமாகவே திட்டியுள்ளார்கள்.

*?: மக்களுக்கு அரசு மீது வெறுப்பு உள்ளது. நீதிமன்ற சட்ட விசாரணைகளிலும் நம்பிக்கையில்லை. ஆனால் அவர்களுக்கு வேறு வழியும் இல்லை என்கிறீர்கள். அப்படியானால் அவர்களின் நிலைதான் என்ன?*

!: உதவியற்றவர்களாக இருக்கிறார்கள். மக்கள் சக்தியை ஒன்று திரட்டி மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய தலைமை எதுவும் இதுவரை இல்லை. அந்த இடம் இன்றுவரை வெற்றிடமாகவே உள்ளது.



"பிரேமதாசாவின்ரை கடையிலை மனிசற்றை கண், உயிரோடை பொம்பிளையள் வியாபாரம் நல்லா நடக்குதாம். ஆனா ஒரு சாமான் தான் அவுட்டொவ் ஸ்ரொக்காம்"

"அதென்ன சாமான்.?"

"ஜனநாயகம்!"

– ஸ்ரீ.சபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*?: மனித உரிமை மீறல்களில் தொடர்ந்து ஈடு படுவதற்கு அரசுக்கு வாய்ப்பாக உள்ள அம்சங் கள் எவை?*

!: அவசரகாலச்சட்டம் முக்கியமானது. இச் சட் டம் கடந்த 9 வருடங்களாகத் தொடர்ந்து அமு லில் இருந்து வருகிறது. வடக்கு, கிழக்கில் இச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு யுத்த த்தை அரசு காரணமாகக் காட்டுகிறது. ஆனால் தெற்கில் பிரகடனப்படுத்துவதற்கு அரசால் எந் தக் காரணத்தையும் சொல்ல முடியவில்லை. அரச படைகள் தான்தோன்றித்தனமாய் நடப்பத ற்கு இந்தச் சட்டங்கள்தான் துணையாய் நிற்கி ன்றன. அரசு கூறுவதுபோல நாட்டின் பாதுகாப் புக்கு எந்தவகையிலும் இச் சட்டங்கள் உதவவி ல்லை. மாறாக மக்களின் அடிப்படை உரிமைக ளைப் பறிப்பதற்காகத் தான் இது அமுல்படுத்தப் படுகின்றது. சமீபத்திய சட்டமொன்றை உதாரண மாகச் சொல்லலாம். தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்வதும், தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இதை மீறுபவர்களுக்கு 10 வருடங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படும். *(இந் நேர்கா ணல் ஒக்ரோபர் மாதத்தில் நிகழ்ந்தது. இதன் பின்னர் தொழிலாளர்களின் எதிர்ப்புப் போரா ட்டத்தினால் இச் சட்டம் வாபஸ் வாங்கப்பட்ட தாக அறிகிறோம் - ஆ.கு )* இன்னுமோர் உதாரணமாக நிலப்பறிப்பைச் சொல்லலாம். அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஏராளமான விவ சாயிகள் தங்கள் விவசாயக் காணிகளைப் பறி கொடுத்துள்ளனர். மலையகத்தில் நிலமற்ற தொழிலாளர்கள் தோட்டக்காணிகளில் குடிசை போட்டு வாழ்ந்தால் கைதுசெய்யப்பட்டு, விசா ரணைகளின்றி சிறையிலடைக்கப்படுகிறார்கள். கல்வி மறைமுகமாக தனியாரிடம் கையளிக்கப் பட்டு, மேல்தட்டினருக்கு மட்டும் கல்வி வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலமை உருவாக்கப்பட்டுள்ளது.

*?: அவசரகாலச் சட்ட நீடிப்பு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் பொழுது தொடர்ந்தும் அத ற்கு ஆதரவளிக்கப்படுகிறதுதானே?*

!: தமிழ், முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சிகள் பலவும் அவசரகால நீடி ப்புக்கு ஆதரவாகவே வாக்களித்து வருகின்றன. இதனால் இச் சட்டத்தைத் தொடர்ந்து அமுல் படுத்துவதில் அரசுக்குச் சிரமங்கள் இல்லை.

*?: ஆகமொத்தத்தில் இந்த அரசுக்கு ஆதரவு பலவழிகளில் தொடர்ந்து கிடைத்து வருகிறது?*

!: ஆம். இன்று ஆளும் கட்சியின் பிரதான பேச் சாளராக இருப்பது ஐ.தே.க. உறுப்பினரல்ல, ஒஸி அபேயகுணசேகரதான். இவர் பிரேமதாசா வின் புகழ்பெற்ற பேச்சாளராகத் திகழ்கிறார். சுதந்திரக்கட்சிக்குள் அண்மையில் உருவாக்கப் பட்ட 'ஹெல உமய' என்ற அமைப்பு பிரேமதா சாவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக் கிறது. பிரேமதாசா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து 6 எம்.பி.க்களை கொழு ம்புக்கு அனுப்பி பிரேமதாசாவைக் காப்பாற்றினர்

*?: மனித உரிமைகள் விடயம் வியாபாரமாக்கப் பட்டுள்ளது என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டீர்கள் இன்று இலங்கையில் ஏராளமான மனித உரிமை நிறுவனங்கள் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதாக அறிய முடிகிறதே?*

!: பல மனித உரிமை நிறுவனங்கள் வெளிநாடு களின் பண உதவியுடன் இயங்குகின்றன. இவற் றின் நிர்வாகிகள் உயர்குடியினர். அத்துடன் குறி ப்பிட்ட சிலரும், சில குழுக்களுமே பல் வேறு பெயர்களில் இயங்குகின்றனர். பல பெயர்களில் இயங்குவதால் பெருமளவு நிதியை வெளிநாடுக ளிலிருந்து இவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். பணம் சம்பாதிப்பதும், புகழ் பெறுவதுமே இவர் கள் நோக்கம். மக்கள் வாழ்ந்து கொண்டிருக் கும் சூழ்நிலையில் இவர்கள் வாழவில்லை. மக் களின் உண்மையான பிரச்சினை இவர்களுக்குத் தெரியாது.


*?: என்றாலும் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பது என்பது அவர்களுக்கு ஆபத்தான தாக இல்லையா?*

!: இல்லை. ஏனென்றால் அவர்கள் அறிக்கை களை மட்டுமே வெளியிடுகிறார்கள். வேறு நடை முறைகள் எதுவும் செயலில் இல்லை. எந்தப் பிரச்சினையிலும் நேரடியாகச் சம்பந்தப்படாமல் தாம் அறிந்ததை வைத்துக் கொண்டு அறிக்கை தயாரிக்கிறார்கள். அதிலும் சில சம்பவங்களை மட்டுமே தெரிந்தெடுத்து எழுதுகிறார்கள். இது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்கத்தைப் பெரிதும் பாதிக்கவில்லை.

*?: இன்று தொடரும் யுத்தத்திற்கு யார் காரணம்?*

!: நிச்சயமாக இலங்கை அரசுதான். அனைத்து இனங்களும் சமமாக வாழ்வதற்கான உரிமை கிடைப்பதற்குரிய அறிகுறிகளே இல்லை. இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி பலரும், பல கட்சிகளும் தமது கருத்துகளை முன்வைத்த போதும் அரசு இதுவரை வாயே திறக்கவில்லை. அரசு போரைத் தொடரவே விரும்புகிறது. இன்றும் தொடரும் யுத்தத்திற்கும், இத்தனை அழிவுகளுக்கும் இலங்கை அரசுதான் பொறுப் பேற்க வேண்டும்.

*?: யுத்தமும், பொருளாதார நெருக்கடியும், மனித உரிமைமீறல்களும் தென்னிலங்கையில் ஜே.வி.பி. மீண்டும் வளர்வதற்கான சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளனவா?*

!: இல்லை என்றுதான் நினைக்கின்றேன். காரணம் கடந்த காலங்களில் ஜே.வி.பி. மேற்கொண்ட தவறான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஜே.வி.பி. மீதான வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. பாடசாலைகள், பல்கலைக் கழகங்களை மூட வைத்தமை, வைத்தியசேவைகளைச் சீர்குலைத்தமை, தனிநபர் பழிவாங்கல்கள் போன்றவை இந்த வெறுப்புக்குக் காரணம். பழிவாங்கல் நடவடிக்கையாக இராணுவத்தினரினதும், பொலிஸாரினதும் குடும்பங்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் கொலை செய்த ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் அரச படைகள் மத்தியில் ஜே.வி.பி. மீதான தீவிர ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. ஆனால் பிரேமதாசா அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் ஜே.வி.பி.யை மறுபடியும் வளர்க்க விரும்புகிறது. ஏனெனில் ஜே.வி.பி.யின் கடந்தகால வன்முறைகள் பிரேமதாசா அரசிற்குப் பெருமளவில் உதவியுள்ளன.

*?: அப்படியானால் தென்னிலங்கையில் ஆயுதமேந்திய இயக்கங்கள் தோன்ற வாய்ப்பு இல்லையா?*

!: உண்டு. மக்கள் அவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சில இடங்களில் மாலை 5 மணிக்கு மேல் யாரும் தெருவில் நடமாடுவதில்லை. கொலை, கடத்தல், கொள்ளை எல்லாம் மலிந்துவிட்டன. பொலிஸ், இராணுவத்தின் அடாவடித் தனங்கள் எல்லை மீறிவிட்டன. பல்கலைக்கழக மாணவர்கள் தமது படிப்பை முடித்தபின் வேலை வாய்ப்பற்றவர்களாக உள்ளனர்.

*?: இலங்கை முழுவதையும் உலுப்பும் பிரச்சினைகளிலிருந்து விடுபட மனித உரிமை மீறலுக்கு எதிராகக் குரல் கொடுப்பது மட்டும் போதுமானதா?*

!: இல்லை. இலங்கையில் பல்வேறு பிரச்சினைகள் பின்னிப் பிணைந்துள்ளன. பிரதான பிரச்சினையாக வடக்கு, கிழக்கில் உள்ள இனங்களுக்கு சம உரிமை வழங்கப்படாததையும், அவ்வினங்கள் மீது ஆயுத அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதையும் சொல்லலாம். தென்னிலங்கையில் நினைத்துப் பார்க்கமுடியாத பொருளாதாரச் சுமை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் மக்கள் சக்தியைக் கட்டியெழுப்புதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. தாய்லாந்தில், ஈரானில் நடந்ததுபோல வெகுசனசக்தியை அணிதிரட்டுவதன் மூலம் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர முடியும். தமிழர்களைப் பொறுத்தவரையில் வடக்குக் , கிழக்குத் தாக்குதல்கள் காரணமாக கொழும்புக்கு வந்து தங்குவதும் அல்லது வெளிநாடுகளுக்குப் போய் அரசியல் தஞ்சம் கோருவதும் தீர்வைக் கொண்டுவர மாட்டா.

*பேட்டி: எழில்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# பிச்சை

போனகிழமை வரை எனக்கு 'செவ்'வாக இருந்த அலி இப்போது என்னோடு வேலை செய்கின்றான். நாலு வருசம். அலி ஏன் சிரிக்கிறான், முறைக்கிறான் என்பதற்கெல்லாம் அர்த்தம் தெரியாமல் அவதிப்பட்ட காலம் போய் பார்த்த மாத்திரத்திலேயே பனிச்சென்று தெரிகிற மாதிரிப் பழகுகின்றான். அவனுக்கு ஆட்களைக்கொண்டு வேலை வாங்கத் தெரியாதாம். இது மேலிடத்து விளக்கம். கௌரவம் பார்த்து வேலையை விடமுடியாத வாழ்வின் நெருக்கம். நேற்று வரை நீ யாரோ நான் யாரோ. இன்றுமுதல் நான் வேறோ நீ வேறோ.

வேலை முடிந்து கதவடியில் கடனுக்கு நிற்கிறமாதிரி மசிந்திக்கொண்டு நின்று, ஏன் நிற்கிறோம் என்பது எப்பனும் தெரியாதுபோல பத்திரோன் அலட்சியமாகப் பார்த்து யாரோடையோ அலட்டி முடிந்து பிச்சைபோட்ட மாதிரி 150 பிராங்குகள் சில்லறை தர... நேரம் மாலை ஆறு.

வீட்டிலை நாலு சனம். ஏற்கெனவே இருந்த இரண்டும் இப்பதான் பெட்டி இறக்கிற மாதிரி பெட்டை இறக்கி வைச்சிருக்கினம். ஒன்றுக்கும் உருப்படியான வேலையில்லை. காலமை வேலைக்கு வெளிக்கிடேக்கைதான் "குசினிக்கை ஒரு கோதாரியும் இல்லை. வரேக்கை ஏதேன் வாங்கியா டாப்பா". இனி ஏழு மணிக்கெல்லாம் கடை பூட்டிவிடும். என்ன செய்யிறது. எல்லாம் நம்ம காலம். மனதுக்குள் வெதும்பியபடி அலியோடு லகாருக்குள் படி இறங்கினேன்.

படிவாசலை எதிர்நோக்கியபடி பிளாட்பாரத்தூணோடு ஒருத்தன் இருந்து அழுது கொண்டிருக்கிறான். பிச்சை எடுப்பவர்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். இந்தமாதிரி அழுகையை ஒருபோதும் பார்த்ததில்லை. யாரையும் குறித்துப் பார்த்து முகத்தின் உணர்ச்சித் திரைகளை மாற்றாமல் தேம்பித் தேம்பி அழுகிறான். அவனுக்கும் நாலு சில்லறைகளுக்கும் நடுவே ஒரு கடுதாசி மட்டையில் ஏதோ பிரெஞ்சில்.

மேலே 'பொன்ஜூ'', கீழே 'மெர்சி' தவிர வேறெதுவும் விளங்கவில்லை. ஆயினும் என்ன. அவன் அழுகைக்கும் அந்தச் சில்லறைகளுக்கும் இடையே என்ன இருக்கும், 'எனக்கு வாழ வழியில்லை' என்பதுதானே.

ஐந்தடி தள்ளி நின்று அவனை மீண்டும் அளந்தேன். சதம் அளவேனும் ஊத்தையில்லாத பனிச்சென்ற சீமெந்து கலரில் கொட்றோய் ஜீன்சும், நல்ல ரக வெளிர்நிற சேட்டும் அணிந்திருந்தான். சப்பாத்து என்னவோ கொஞ்சம் ஊத்தைதான். லெதர் அல்லாத சப்பாத்து கொஞ்சம் ஊத்தையாக இருப்பதுதான் பிரெஞ்ச் ஸ்ரைல் என்று போனமாசம் வந்து சேர்ந்த தம்பி சொன்னதும் நினைவுக்கு வந்து போனது.

வயசென்ன? மிஞ்சிப் போனாலும் மூப்பதைத் தாண்டாது. போர்த்துக்கல்லோ, ஸ்பனியனோ என்று கருதக் கூடியளவிற்கு உழைப்பின் செம்மை முகத்தில் இல்லை. அடையென்றால் முகத்திலேயே தெரியும். அல்லாட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் அலி அவசரப்பட்டுத் தன்னிப் போயிருப்பான். சந்தேகமேயில்லை. பிரெஞ்சுக்காரன் தான்.

நேற்று நன்றாக இருந்து இன்று இந்தக் கதி வந்து விட்டதே என்று விம்மி வெடிக்கிறான் போலும். யாரையும் பார்க்கவும் விரும்பாமல், முகத்தை மறைக்கவும் முடியாமல் பார்வையை நாலடி முன்னே குத்தி தேம்புகிறான். கிளிசரீன் காணாத கண்ணீர்.

விலத்தி நாலடி நகர்ந்திருப்பேன். வேறு நகரத்தில் இருந்தோ அல்லது வேறு நாட்டில் இருந்தோ ரூறில் ராக வந்து காசைத் தொலைத்துத் திரும்பிப்போக வழியில்லாமல்...

இப்படி ஒரு நினைப்பு என்னையும் முந்திக்கொண்டு வழிமறித்தது. ஒரு நிமிடம் நின்று யோசித்தேன்.

இந்த நினைப்பை எப்படித்தான் உதறியெறிந்தாலும் அது என்னைத் தொடர்ந்து வந்து இரவு எங்கை தூங்கு பார்ப்பம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும். பேந்து விடிய வேலைக்கெழும்பிற பஞ்சியிலை 150 பிராங்கும் போய், பத்திரோனிட்டை நாறல் பார்வையோடை நாலு கிழியலும் வாங்கவேண்டும்.

சற்றுப் பின்னால் திரும்பிப் பின்பொக்கற்றுக்குள் கைவைத்து பத்துப் பிராங்கைத் தூக்கிப் போட்டேன். அவன் பார்வை அசையக்கூட இல்லை. பத்து சென்றிம் போட்டேனா? பத்து பிராங் போட்டேனா? கறுவல் போட்டதா? வெள்ளை போட்டதா? எந்தத் தேடலும் அவனில் இல்லை.

அரை மணிநேர உடம்பு முறிப்பு. மனசுக்குள்ளே இருக்கிற மனிதத்தின் உயிரைக் காப்பதற்கு காசு சம்பாதிக்க வேண்டியதாய்க் கிடக்கு.

றெயின் வந்தது. அலியோடு ஒட்டிக்கொண்டேன். றெயின் இருட்டறைக்குள்ளால் வேகமாக ஓடியது என் வாழ்க்கை போல.

மனிதத்தை பத்துப் பிராங்கும் திருப்திப்படுத்தவில்லைப் போலும். அவன் திரும்பத் திரும்ப கண்முன் நின்றான். அவன் கண்கள் குளமாகியிருந்ததும், முகத்து மேடுகள் ஆறாகியிருந்ததும் அம்மாவை ஞாபகம் ஊட்டியது.

காதுக்கு வேப்பம் குச்சியடைத்து, கண்ணின் அயலட்டைகளும் கறுத்துக் கண்டிப் போய் அழுக்கேறிப்போன சீலையோடு அம்மா அழுகிறாள். காய்ச்சிய கஞ்சியை `மங்கு`க்கை வார்த்து வார்த்து "சாப்பிடுங்கோ பிள்ளைகள் சாப்பிடுங்கோ" என்று தட்டிக் கூரையை அண்ணாந்து பெருமூச்சுவிட்ட அம்மா அழுகின்றாள்.

பிள்ளைகளுக்கு அரை வயிறுகூட நிரம்பாத கஞ்சியை அம்மா நாவில்கூட நனைத்துக் கொள்ளவில்லை. பசி கடித்துக் குதறுகிறதோ, இல்லை எப்படித்தான் இந்தப் பிள்ளைகளை வளர்க்கப் போகிறேன் என்று நினைக்கிறாளோ. தேம்பித் தேம்பி அழுகின்றாள்.

செய்வதறியாது பரிதாபமாகப் பார்த்து நின்ற நான் தெருவில் யாரோ இறங்கியது கண்டு "அழாதையுங்கோ அம்மா, றோட்டிலை ஆட்கள்" என்றேன்.

முந்தானையால் முகத்தை வழித்து அம்மா தன்னை ஆசுவாசப்படுத்தியபோது நினைத்தேன் ஏதோ சொல்லப் போகிறாள் என்று. என்ன சொல்வாள். "நான் அழுகிறேன் என்று உனக்கு இரக்கம் வரவில்லை. யாரோ பார்த்துச் சங்கடப்படப் போகிறார்கள் என்று என்னையடக்குகிறாய். என்னைக் காட்டிலும் உனக்கு அவர்கள் மேல் எம்மட்டு இரக்கம். ஏண்டா, உனக்கு நான்கூட ஏழையாக தெரியுதா" என்றுதானே.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அம்மா சற்று வேறுவிதமாகச் சொன்னாள். "பயப்பிடாதையப்பு. பக்கத்து வீட்டு ராசாத்தி அழுதால் பத்துப்பேர் பக்கத்தில் நின்று ஆறுதல் சொல்வார்கள். நாங்கள் அழுதால் யாரும் இங்கு வரமாட்டார்கள். ஏனெண்டா, அவள் பணக்காறி. நாங்கள் பரம ஏழைகள்"

துக்கம் தொண்டையை அடைக்க கஞ்சியை உறிஞ்சினேன்.

அலி கையில் சுரண்டியிருக்க வேண்டும். சுயநினைவுக்கு வந்தவனாய் திரும்பினேன். "என்ன யோசிக்கிறாய்? பத்து பிராங் அநியாயமாய்ப் போச்சுதெண்டுதானே!" அலி கரவுப் பார்வையோடு கேட்டான்.

அதுதானே. பத்து பிராங் ஏன் போட்டேன். வியந்து பார்த்தேன். பின்னையென்ன. அதிலயிருந்தவன் ஊத்தை உடுப்புப் போட்டிருந்தால் பத்து பிராங் போட்டிருப்பேனா? அவன் தேவை வெகு தூரம் வீடு போய்ச் சேர வேண்டும் என்று எண்ணிவிட்டேன். இரவு சாப்பிட வேண்டும் என்று கேட்டிருந்தால் என் மனிதநேயம் இன்னும் கொஞ்சம் `சீப்`பாகவும் இருந்திருக்கும். உள்ளம் குறுகி நூலில் தொங்கத் தலை கவிண்டேன்.

அலி மீண்டும் தட்டினான். "நீ ஒரு காசுக்காறன். ஏன் உன்னிடம் ஒன்று, இரண்டு பிராங் இல்லையோ?" ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரித்தான். குமட்டிக்கொண்டு வந்தது.

பத்திரோன் தந்த சில்லறை பத்துப் பிராங் தானில் போலும் என்று மனதில் நினைத்துக் கொண்டாலும் "காசுக்கு ஒரு பெறுமானம் இருக்கு. அந்த இடத்தைவிட்டுக் கழன்றால் காணும், அதுக்கு ஒரு சில்லறை நிலத்தில் விழுந்து சத்தம் கேட்டால் போதும் என்று நான் நினைக்கவில்லை" என்று கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுத்தான் சொன்னேன்.



அவன் அதை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லைப் போலும். என்ன எனக்கா புலுடா விடுகின்றாய் என்பது போல தலையாட்டி, நாயைக் கூப்பிட்டு "அதுசரி சொல்லு வாய்தான் சொல்லு" என்று சிரித்தான்.

றெயினுக்குள் துல்லியமான உரத்த குரல் ஒன்று கேட்டுத் திரும்பினேன். பக்கத்தில்தான். மூப்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் பேசுகின்றாள் "நான் இந்த நாட்டைச் சேர்ந்தவள். எனக்கு இரண்டு குழந்தைகள். வேலையில்லை. வீடு இல்லை. வேலையிருந்தால் சொல்லுங்கள். றெஸ்ரோறன்ற் ரிக்கற், றெயின் ரிக்கற், காசு.. எது வேண்டுமானாலும் உதவி செய்யுங்கள்" நிறையப் பேசினாள். விளங்கியது இவ்வளவுதான்.

அவளின் சங்கடம், தவிப்பு - ஒருவேளை நடிப்பாகவும் இருக்குமோ? - எல்லாம் அவள் கண்ணின் படபடப்பிலும், தன்னை மறந்து கையில் உள்ள சஞ்சிகையை மாற்றி மாற்றிச் சுருட்டுவதிலும் தெரிகின்றது.

ஒன்றுக்கு இரண்டு மூன்று தரம் நன்றி சொல்லிக் கை நீட்டத் தொடங்கினாள்.

நான் பின்பொக்கற்றில் விரல்களைச் செருகினேன். அலி தோளால் இடித்து என் மணிக்கட்டில் கைவைத்தான். " நீ எங்கேயிருக்கிறாய். இன்னும் நாற்பது கிலோ மீற்றர் போகவேணும். நீ போய்ச் சேருவதற்குள் உன் இன்றைய சம்பளம் முடிந்து விடும்" என்று ஏசினான். நியாயம்தான். ஆயினும் மனசு ஒற்றைக்காலில் நின்றது. கையை எடுத்துவிட்டு நின்றேன். அவள் என்னைக் கடந்து போனாள். அழகான பெண்தான். நன்றாக உடுத்தியிருந்தாள். கொஞ்ச நாட்களாகவே பார்க்கிறேன். இப்படிப் பிச்சையெடுப்பவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. போன வருடத்திற்கும், இந்த வரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்திற்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம். மூன்று நாலு பேர் என்றிருந்து இப்போ மூந்நூறுக்கும் மேல் ஆகிப் போச்சு. இன்னும் கூடுமோ?

இடையே பாரதியின் நினைப்பு வர லேசாகச் சிரித்தேன். "என்ன சிரிப்பு" அலி சற்று அதட்டலுடன். "இல்லை நம்ம நாட்டில் ஒரு கவிஞன் இருந்தான். அவன் மனைவி வீடுவீடாகத் தண்டிவந்த அரிசியைக் குருவியின் இன்பங் கண்டு அவை பசியாற அள்ளி வீசினானாம்"

"அவனுக்கு விசர்"

"அப்பிடிச் சொல்லாதே. அவன் பெரிய மனிதாபிமானி"

"மனிதாபிமானி அதுதான் மனிதனைப் பார்க்கவில்லை"

சிந்தனை வெடிக்கச் சிறிது மௌனமானேன். அவனுக்கு கவிஞரை விளங்கப் படுத்த எனக்குப் பிரெஞ்சு போதாது.

பிச்சை எடுத்து முடித்த அவன் அடுத்த நிலையத்தில் பெட்டி மாறுவதற்கு வசதியாக கதவு வாசலோடு என் பக்கத்தில் நின்றான். இளமை மாறாத அழகான முகம் சோகத்தில் தோய்ந்து வதங்கிக் கிடக்கிறது. நாலு கலரும் பூசி நயமாகச் சிரித்தான் என்றால் நல்ல எடுப்புச் சாய்ப்பாய்த்தான் இருப்பான். என் ஆம்பிளைப் புத்தி இப்பிடிப் போச்சோ என்னவோ.

உடலையும், உணர்வையும் விற்கும் தொழிலுக்குப் போனால் நல்லாகவே உழைக்கக் கூடியவன்தான். இப்படி கை நீட்டிப் பிச்சை வாங்குகிறான் என்ற எண்ணம் அவன் மேல் ஒரு மரியாதையை பதித்தது. பாவம். நாளை இதிலும் அவன் வயிறு நிரம்பவில்லையென்றால் அங்குதானே போகவேண்டும்.

என்ரை கை தன்ரைபாட்டுக்கே பத்துப் பிராங்கை தூக்கி அவன் கையில் வைத்தது.

அலி தன் பூட்ஸ் காலால் என் காலில் குத்தினான். வலித்தது. அடுத்த ஸ்ரேஷன் வந்து அவன் இறங்கிப்போக "அவனுக்கு இதில் வருமானம் இல்லையென்றால் தன்னை விற்கத்தானே போவான்" கொஞ்சம் கடுமையான குரலில் மெதுவாகவே கத்தினேன். "போகட்டன். அதுக்கு உனக்கென்ன... சரி... இப்ப போனவையளை என்ன செய்யப் போறாய்? கொஞ்சம் காசு கூடக் கொடுத்து வீட்டை அனுப்பிவிடன்" சிரிப்பும் சினப்புமாகப் பேசினான். நான் எதுவும் பேசவில்லை.

இன்னும் கழன்று போகாத கற்புப் புத்தியோ என்னவோ.

சீ! அப்பிடியென்றும் சொல்லேலாதுதான்.

மீண்டும் 'பொன்ஜூ' என்ற குரல் கேட்டு பார்வையைச் செலுத்தினேன். கோட்-ரை எல்லாம் கட்டிய நாற்பது வயதுக்கும் மேலான ஒருத்தன். "நான் ஒரு மதமற்றிக்கன், வேலை இல்லை, அதை விட எனக்குத் தெரிந்தது இதுதான்" புல்லாங்குழல் ஒன்று மேலே வந்து கீழே போனது. "விருப்பமானவர்கள் கேளுங்கள். மற்றவர்கள் மன்னித்துக் கொள்ளுங்கள்" புது மரியாதை உணர்வோடு அலியைப் பார்த்தேன். நக்கலாக கண்ணடித்து "சரிதான் போச்சுது" என்றான். அவன் புல்லாங்குழலை வாயில் வைத்ததுதான் நம்ம ரமணி பிச்சை வாங்கவேண்டும். அதுதான் போகட்டன்.

'என் மனது ஒன்றுதான்
உன் மீது ஞாபகம்...'

என்ற பாட்டை வாசித்தான். ஒருகணம் திகைத்துத்தான் போனேன். அலியை அவசரமாகச் சுரண்டி இது நம்ம நாட்டுப் பாடல் என்றேன். அவன் மீண்டும் நக்கலாக "உன்ரை நாட்டுப் பாட்டோ, அவனைப் பார்க்க ஆர்ஜன்ரீனாக்காறன் மாதிரிக் கிடக்கு" என்றான். அது என்னமோ உண்மைதான். ஆனால் இது நம்ம பாட்டு. அலி விழுந்து விழுந்து சிரிக்கிறான். வெட்கமாய் கிடக்கு. விசரன் சிரிக்கிறான். முதலில் பாட்டை ரசிப்பம். சீமான் நல்லாய்த்தான் வாசிக்கிறான் பாவி.

நம்ம இசையமைப்பாளரின் கள்ளத்தனத்தை உணர்ந்தாலும் இந்தவகையான மெட்டை நாம் கேட்க வைக்கிறதுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

புல்லாங்குழல் வெளியே இறங்கியதும் அலி கேட்டான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவனுக்கேன் காசு போட்டாய் என்று. நீண்டநாட்களாக என்னுள் இருந்த கருத்தையே அலிக்கும் சொன்னேன். அவனிடம் இருந்து எதையோ பெற்றுக்கொண்டோமே அதற்காக நாம் ஏதாவது கொடுக்க வேண்டாமா என்று.

" உன்னோடை கதைச்சுப் பிரயோசனம் இல்லை. படியடியிலை இருந்தவன் நாளைக்கு இருக்க மாட்டான் என்கிறாய். பிச்சை கேட்டவன் நடுத்தெருவுக்குப் போகக் கூடாது என்கிறாய். பாட்டை ரசித்ததாலை இவனுக்குப் பணம் கொடுத்தேன் என்கிறாய். எல்லாம் நியாயம்தான். எங்கைபோய் முடியப் போறியோ..."

பெருமூச்சு வேறுவிட்டு விட்டு தன் ஸ்ரேசன் வந்ததும் இறங்கிக் கொண்டான்.

நம்ம ஸ்ரேசன் வந்து நான் இறங்கி றோட்டுக்கு ஏற... என்ரை கஷ்ட காலமோ, கைக்குழந்தையோடை மனிசியொன்று இருந்தபடி கைநீட்டிற்று. நான் கொஞ்சம் உற்றுப் பார்த்ததும்தான், வாற போறவர்களையும் விட்டிட்டு குழந்தையைக் காட்டி என்னைத்தான் கெஞ்சினாள்.

'தூண்டில்' ஞாபகம் வந்தது. நாடற்றவர்களாம். றோமாவோ, ஸிந்தியோதான். ஏதோ வடஇந்திய வழித்தோன்றல்களாம். வந்த இடத்திலை தங்கேலாம நாடு நாடாய்த் திரிய ஐரோப்பிய அரக்கர்களும் பிடிச்சு பிடிச்சுக் கொல்ல...

எங்களுக்கும் இதுதானே நடக்கிறது. இந்தக் கோலத்தை நாம புரியாவிட்டா..

அப்புறம் என்ன அதே தான். வாழ்க.. வளர்க...

நேரம் ஏழு மணியாகிவிட்டது. இனி அடையாள் கடை தான் தஞ்சம்.

மூன்று பிராங் உப்புக்கும் மூன்று பிராங் கூட்டி வைச்சிருப்பான். ஆனால் கடை மட்டும் அடையான். அவனுக்கும் இந்தத் தொழில் ஒன்றுதான் மிச்சம் - லூபென் நாஸியை விட்டுக் கடையை எரிக்கும் வரை.

கடைக்குள் நுழைந்தும் காசைக் கணக்குப் பார்த்தேன். அரைகுறைச் சாமான்களோடு வீட்டை போனேன்.

"என்னடாப்பா பத்தி ரோன் குறையவே தந்தவன்"

"இல்லை. இடையிலை செலவாய்ப் போச்சு"


"என்ன செய்தனீ?"

"ஏதோ செய்தேன்"

"ம். ஒன்றுமில்லை. உனக்கும் பெட்டி இறக்கத்தான் வேணும்" அவள் நக்கல் சிரிப்பு என்னில் பாய கண் அவள் பெட்டிக்குப் பறந்தது.

நான் எதுவும் பேசவில்லை. என்னத்தையன் நினைக்கட்டும். மேலும் பேசி விசரைக் கிளப்பக்கூடாது என்பதற்காக.

இரவு தூக்கம் வரவில்லை. தூக்கம் வாவேணும் எனக்கு! காசு கொடுத்தேன். ஒருவேளை பத்து பிராங் மட்டும் போயிருந்தால் தூக்கம் வந்தாலும் வந்திருக்கும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூறு மட்டும் எண்ணிப் பார்த்து எல்லாம் பண்ணிப் பார்த்தும் நித்திரை வரவில்லை. அலிதான் வந்தான்.

"உன்னை மாதிரி ஆட்களின் காசு சேர்ந்தால் அவர்கள் உன்னை மாதிரிக் கஷ்டப்படாமலே உனக்கு மேல் சம்பாதிப்பார்கள். நீங்களே உருவாக்கி நீங்களே வளர்க்கிறீர்கள். காசு கொடுப்பதால் உனக்குக் கிடைக்கும் திருப்தி நீ பிச்சையெடுப்பதில்தான் முடியும்"

காலை வேலைக்குப் போனதும் அலிக்குச் சொன்னேன். "இரவு உன்னோடு பெரிய சண்டை"

"என்ன பிச்சைக்காரன் பற்றியா?"

"ஆமாம். நம்மைப் பற்றியேதான். கஷ்டப்படுபவர்களைக் கண்டும் காணாமற் போக முடியவில்லை. எது கேட்கின்றார்களோ அது இருந்தால்... குறைந்தபட்சம் மனிதனாக இருக்க விரும்புகிறேன்"

"கொடு. உன்ரை காசைத் தானே கொடுக்கிறாய். ஆனால்... இதன் மூலம் யாராவது குறைந்தால் சரிதான். நீ மனிதனாக இருந்து கொள்ளலாம். அல்லாவிடில்!"

வேலை முடிந்து லகாருக்குள் படியிறங்கினோம். அதே மனிதன். அதே போன்ற அழுகை. அதே உடுப்பு. தேம்பித் தேம்பி அழுகின்றான். கிளிசரின் காணாத கண்ணீர்.

அப்படியே படியடியில் அசந்து நின்றுவிட்டேன். மனிதர்கள் மனிதர்களைப் பார்த்துப் பார்த்து சந்தோஷமடைவது எப்போது? கேள்வி மட்டும் எனக்குள்ளே நிழலாடிக் கொண்டிருந்தது.

- க.கலைச்செல்வன்

---

பத்திரோன் - முதலாளி
லகார் - புகையிரதநிலையம்
பொன்ஜூ - வணக்கம்
மெர்சி - நன்றி
அடை - அராபியன்
ஹூபென் - நாஸித் தலைவன்

---

*அடுத்த ஓராண்டு மலரில்...*

- ஈழம்: 70களில் கலை, இலக்கியம் *
- ஜேர்மனி: அகதிகளை விரட்டும் புதுச் சட்டங்கள் *
- சிறுகதை: கையறு நிலை *
- ஜேர்மனி: உதவி நிறுவனங்களின் சுயரூபம் என்ன? *
- பயபக்தி!! *
- தேசம்! *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லீம் கொங்கிரசும், கரிநாளும்.

பொலநறுவைப் படு கொலைகளைக் கண்டிக்கும் முகமாக, முஸ்லீம் காங்கிரஸ் சென்ற ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதியை கரி நாளாக அனுஷ்டிக்க ஒழுங்கு செய்திருந்தது. ஆரம்பத்தில் இக் கரிநாள் அறிவிப்பு என்னவோ தீவிரமானதாகவே இருந்தது உண்மைதான். கரி நாளன்று பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படியும், கடைகளைப் பூட்டும்படியும், வேலைத் தளங்களுக்குச் செல்லாதிருக்கும்படியும் மு.கா அழைப்பு விடுத்தது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கரி நாளை ஆதரிப்பதாக அறிக்கைகள் விட்டன.

ஆனால், கரி நாள் நெருங்க நெருங்க கோரிக்கைகளின் வேகம் குறைவடையத் தொடங்கியது. பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, வேலைத் தளப் பகிஷ்கரிப்பு என்பன கைவிடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப் பட்டால் போதும் என்று மு.கா. துண்டுப் பிரசுரம் வெளியிட்டது. கரி நாள் போராட்டம் புலிகளுக்கு எதிரானதேயொழிய அரசாங்கத்திற்கு எதிரானது அல்ல எனவும், புலிகளை எதிர்த்துச் சண்டையிடும் படையினருக்கு என்றும் தங்கள் ஆதரவு உண்டென்றும் அத் துண்டுப் பிரசுரத்தில் மு.கா. வலியுறுத்தியது.

கரி நாள் அரசுக்கு எதிரானது அல்ல என்று கூறிய தன் மூலம் பொலநறுவைக் கொலைகள் தொடர்பாகவும், இது போன்ற பிற நடவடிக்கைகள் தொடர்பாகவும் அரசு காட்டிவரும் பொறுப்பீனத்தை மூடி மறைத்துள்ளது மு.கா. இன்றுவரை தீர்க்கப்படாத இனப் பிரச்சினையிலும், பிரித்தாளும் தந்திரத்திலும் அரசின் கணிசமான பங்கை மு.கா. நாளுக்காக மறைத்து விட்டது.

புலிகளின் முஸ்லீம் மக்கள் மீதான தாக்குதல், புலிகளின் தமிழ் இனவெறி என்பன சந்தேகத்திற்கிடமின்றி கண்டிக்கப்பட வேண்டியவை; எதிர்க்கப்பட வேண்டியவை. ஆனால், இலங்கை அரசு புலிகளுக்குச் சற்றும் குறைவில்லாத விதத்திலேயே தமிழ்-முஸ்லீம் மக்களின் பிரச்சினையை அணுகுகிறது என்பதை மறைத்துவிடுவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் தாக்குதலுக்கு பதில் சொல்ல வேண்டியது புலிகள் மட்டுமல்ல, இலங்கை அரசுமே என்பது தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது தான் முஸ்லீம் மக்களுடைய எதிர்ப்பின் நியாயத்தன்மை, முஸ்லீம் இனவெறிப் போக்குக்குப் பலியாகாமல் வெற்றிகரமாக அமைய முடியும். ஆனால் மு.கா. அரசைத் தாஜா பண்ணுவதில் காட்டிய அக்கறையை இதில் காட்ட முயற்சிக்கவில்லை!

கரி நாள் போராட்டத்தின் போது - தமிழ் மக்களும், தமிழ்க் கட்சிகளும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் கூட - தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் வன்முறைகள் கட்டவிழ்க்கப் பட்டன. தமிழர் பகுதிகள் தாக்கப்பட்டன. கொழும்பில் பண்டாரநாயக்க மாவத்தையில் தமிழர் வீடுகள் தாக்கப் பட்டு கொள்ளையிடப்பட்டன. அங்கிருந்தவர்கள் அடித்துக் காயப்படுத்தப்பட்டனர். அவ் வீதியிலுள்ள இந்துக் கோவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஓடன் அர்ச்சகரும் தாக்கப்பட்டார். அண்மையில் புதிதாகக் கட்டப்பட்ட கணபதி வித்தியாலயம் மிக மோசமாகத் தாக்கப்பட்டு தளபாடங்களும் சிதைக்கப்பட்டன. கொழும்பு விவேகானந்த சபையில் தங்கியிருந்த தமிழ் அகதிகளைத் தாக்குவதற்கும் முயற்சி எடுக்கப்பட்டது. இவ்வளவு நடைபெற்றும் முஸ்லீம் காங்கிரஸ் இவற்றைக் கண்டிக்கவில்லை.

மு.கா. இன் மேற்படியான செயற்பாடுகளுக்குக் காரணம் என்ன? முஸ்லீம்கள் மத்தியிலிருந்து இப்படி ஒரு எதிர்ப்பு ஏன் உருவாகியது? என்பதை முஸ்லீம்கள் மக்களினது அரசியற் பிரச்சினையையும், அதில் மு.கா. இன் பங்கினையும் கவனிக்கிற ஒருவர் இலகுவில் கண்டுகொள்ள முடியும்.

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினைகள் தோற்றம் பெற்ற 1020களிலேயே முஸ்லீம்களின் தேசியக் கோரிக்கைகளும் தோற்றம் பெற்றுவிட்டன எனலாம். இதற்கு முன்னரே சிங்களத் தேசியவாதம் அநாகரிக தர்மபால போன்றவர்களால் முன்வைக்கப்பட்டபோது அது பிரித்தானிய அரசுக்கு எதிரானதாக அல்லாது முஸ்லீம்களுக்கும், இந்தியர்களுக்கும் எதிராகவே காணப்பட்டது. 1915இல் தர்மபால எழுதினார்:

"... அந்நியரான முகம்பதியர் சைலொக்கிய வழிமுறைகளால் யூதர்கள் போன்று செல்வந்தராக மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்று கையிலிருந்து நாட்டைக் காப்பதற்காக இரத்தத்தை தனு போல் பெருக்கிய முதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களில் நாடோடிகளாய்த் தெரிகின்றனர். தென்னிந்திய முகம்மதியன் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் எத்தகைய அநுபவமுமற்ற உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசியைக் காண்கின்றான். இதன் விளைவு முகம்மதியன் முன்னேறுகிறான். மண்ணின் மைந்தன் பின்தள்ளப்படுகின்றான்.."

இதைவிட "சிங்கள ஜாதி" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பியதாச சிறிசேனா "கரையோர முஸ்லீம்களிடமும், கொச்சிக்காறரிடமும், அந்நியரிடமும் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்க வேண்டாம்" என்றார்.



சிங்களத் தினசரியான "லக்மின" கரையோர முஸ்லீம்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "வெறுக்கத்தக்க இக் கும்பலை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு தகுந்த திட்டம் தீட்டப்படுதல் வேண்டும்" என்று எழுதியது.

"தினமின" பத்திரிகை "முஸ்லீம்கள் இங்கு வேருன்றிய பகைவர்" என்று எழுதியது.

இவ்வாறு ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற சிங்களத் தேசியவாதத்தின் சகல கூறுகளும் முஸ்லீம்களுக்கு எதிராகவே வெளிப்பட்டன. 1915 ஆம் ஆண்டு உருவான சிங்கள-முஸ்லீம் கலவரம் முஸ்லீம் எதிர்ப்பு நிலையின் உச்ச வடிவம் எனலாம். கண்டியில் உருவான இக் கலவரம் பின்னர் நாடெங்கிலுமுள்ள முஸ்லீம்களுக்கு எதிராக திருப்பி விடப்பட்டது. ஆட்சியிலிருந்த பிரித்தானியாவும் இனக் குரோத்தை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

1920இல் அருணாசலத்தின் தமிழர் மகாஜனசபை தோற்றம் பெற்றபோது தமிழ்த் தேசியவாதமும் அரசியல் ரீதியாக தோற்றம் பெற்றது. முழு இலங்கை என்ற நிலையில் கோரிக்கையை வைப்பதற்குப் பதிலாக இனரீதியில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறு ஒருபக்கத்தில் தமிழ்த் தேசியவாதம் முன்வைக்கப்பட்டபோது மறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்கங்களிலிருந்து முஸ்லீம்களிடமிருந்தும், இந்திய வம்சாவளியினரிடமிருந்தும் அவ ரவர் தேசியவாதங்கள் எழுச்சி பெற்றன. முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் அவர்களது தேசியவாதம் இலங்கை முஸ்லீம்கள் என்ற தேசிய அடையாளத்தைக் கோரி நின்றது.

முஸ்லீம் தேசியவாதம் இவ்வாறு தோற்றம் பெற்றாலும், அது எழுச்சியடைவதில் பல சிக்கல்கள் காணப்பட்டன. அதில் பிரதானமானது அவர்கள் இலங்கையில் செறிந்து வாழாமல் பரவலாக வாழ்கின்ற நிலையாகும். இந் நிலமை அவர்களுக்கென ஒரு தேசிய இயக்கம் தோன்றுவதைத் தடுத்ததோடு சிங்களக் கட்சிகளுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் பின்னால் இழுபடும் நிலையையும் தோற்றுவித்தது.

உண்மையில் முஸ்லீம்களுக்கான தேசிய இயக்கம் தோற்றம் பெறக்கூடிய நிலை தென்னிலங்கையை விட வடக்கு-கிழக்கிலேயே காணப்பட்டது. மொத்த முஸ்லீம்களில் 40% மட்டும் இங்கு வாழ்ந்தாலும் இங்கு அவர்கள் ஓரளவு செறிவாக வாழ்ந்தார்கள். அதுவும் அம்பாறை மாவட்டத்தில் அவர்களே பெரும்பான்மையாக வாழ்ந்தார்கள். இதைவிட மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டத்திலும் ஓரளவு செறிவாக வாழ்கிறார்கள். இதனால் தங்களுக்கென ஒரு தேசியத்தை வளர்த்தெடுக்க ஒரு நிர்வாகப் பிரிவைக் கோரக்கூடிய நிலையும் இங்கேயே காணப்பட்டது.

ஆனால், துரதிஷ்டவசமாக முஸ்லீம்களின் தலைமை என்பது கொழும்பை மையமாகக் கொண்ட மேட்டுக்குடித் தலைமையாக இருந்தமையினால் இது தொடர்பாக எந்தவித அக்கறையையும் காட்டவில்லை.

வடக்கு, கிழக்கில் ஆதிக்கம் செலுத்திய தமிழரசுக் கட்சியும் முஸ்லீம்களை தமிழர்களில் ஒரு பிரிவாகக் கருதும் வகையில் இஸ்லாமியத் தமிழர்கள் எனப் பிரச்சாரம் செய்ததே தவிர அவர்களது தேசிய தனித்துவத்தை அங்கீகரிக்கவில்லை. மாறாக தமிழ் இனவாதத்தை அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடும் வேலையைச் செய்தது. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றைத் தொடர்ந்து வந்த இயக்கங்களும் அதே பாணியிலான அரசியலையே கொண்டிருந்தன. அவற்றிற்கு மேலாக முஸ்லீம்கள் மீது ஆயுத வன்முறையையும் மேற்கொண்டன.

இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னர் குடியேற்றம், சிறுபான்மையினம் என்ற வகையில் பாரபட்சம் என்பவற்றை மட்டும் எதிர்கொண்ட முஸ்லீம் மக்கள் பின்னர் பாதுகாப்புப் பிரச்சினையையும் எதிர்நோக்க வேண்டியவர்களானார்கள். இந் நிலையில் தங்களைப் பாதுகாக்கக் கூடிய தேசிய இயக்கத்தின் அவசியம் தீவிரமாக உணரப் பட்டது. இவ்வுணர்வு அலைகளின் மேலேயே முஸ்லீம் காங்கிரஸ் தன்னை ஓர் ஸ்தாபனமாக நிறுவிக் கொண்டது.

முஸ்லீம்களின் தேசியத்தை முன்னெடுக்கும் அமைப்பு ஒன்றிற்கு வெற்றிடம் ஏற்பட்டிருந்த நிலையில் முஸ்லீம் காங்கிரஸ் அவ்விடத்தில் குந்திக் கொண்டதே தவிர, அது முஸ்லீம்களின் தேசிய இயக்கமாக வளரவில்லை. எவ்வாறு தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சியில் தமிழரசுக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் குந்திக் கொண்டு தமிழ்த் தேசியவாதத்திற்கு எதிரான வேலைகளைச் செய்தனவோ அவ்வாறேதான் முஸ்லீம் காங்கிரஸும் செய்து கொண்டது.

60களிலும், 70களிலும் தமிழரசுக் கட்சி இனப் பிரச்சினையை தேசிய விடுதலைக்கான போராட்டமாகப் பார்க்காமல் இனவாதக் கண்ணோட்டத்திலேயே பார்த்து அணுகியது. பொது எதிரிக்கு எதி

இந்த இதழில் பிரசுரமாகிய ஓவியங்கள் வேறு சஞ்சிகைகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராக, அதன் திட்டமிட்ட தமிழின எதிர்ப்புப் போக்குக்கு எதிராக, சிங்களப் பேரினவாத நடைமுறைக்கு எதிராக, தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை முன்வைத்து, ஐக்கியப்படக்கூடிய அனைத்து முற்போக்கு சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களையும் ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக இனவாதத்தை வளர்த்து அவர்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதில் கணிசமான பங்காற்றியது.

இன்று அதே வேலையையே முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளுகின்றது. தமிழ் இனவாதத்தை எதிர்த்து தமிழ் மக்களை வென்றெடுப்பதற்குப் பதிலாக முஸ்லிம் இனவாதத்தினை வளர்த்து தமிழ் மக்களைப் புலிகளுக்குப் பின்னால் தள்ளுகின்றது. இவ்வினவாத எழுச்சியின் வெளிப்பாடாகவே கரி நாளன்று கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் ஏவிவிடப்பட்டன. மறுபக்கத்தில் முஸ்லிம் மக்களை ஒடுக்குகின்ற, முஸ்லிம் பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்குகின்ற, முஸ்லிம் பிரதேசமான அம்பாறை மாவட்டத்தை திகாமடுல்கல என்ற சிங்களப் பெயருக்கு மாற்றிய, இனப் பிரச்சினையைத் தீர்க்காது சிங்கள-தமிழர் இன முரண்பாட்டின் மேல் தனது இருப்பை வைத்திருக்கின்ற அரசுக்கு முண்டு கொடுக்க முயற்சிக்கின்றது. முஸ்லிம்களின் பாதுகாப்பை முஸ்லிம்களே பொறுப்பேற்கின்ற தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்ப எந்தவித முயற்சியும் செய்யாமல் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அரசின் தயவை நாடி நிற்கின்றது. புலிகளின் இனவாதத்தைக் காரணம் காட்டி தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் இனவெறியை நியாயப்படுத்துகிறது.

உண்மையில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் தேசிய இயக்கமுமல்ல. அதன் தலைவரான அஷ்ரப் முஸ்லிம்களின் விடுதலைக்கான தேசியத் தலைவருமல்ல. ஒரு விபத்தாகவே அஷ்ரப் தலைமைக்கு வந்தார். முஸ்லிம்களின் தேசிய இயக்கமும், தேசியத் தலைவரும் இனிமேல்தான் உருவாக வேண்டும். அத்தகையதொரு உருவாக்கத்திற்கு தமிழ், முஸ்லிம் முற்போக்குச் சக்திகளின் பங்களிப்பும் அவசியமாகும்.

அப்படி உருவாகாவிட்டால் முஸ்லிம்களின் மத்தியில் இருந்து ஒரு "முஸ்லிம் புலி" இயக்கமும், ஒரு "முஸ்லிம் பிரபாகரனும்" தோற்றம் பெறுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இதனால் லாபமடையப் போவது முஸ்லிம்களோ, தமிழர்களோ அல்ல; மாறாக இலங்கை பௌத்த பேரினவாத அரசு மட்டுமே!

* ரஹ்மான் (ஈழம்)
* சுந்தர் (ஈழம்)



யோவ் ஐயரே, மசூதியை இடிச்சுத் தள்ளிடனும்னு சாராயம் தந்து என்னைய கூட்டிக்கினு போய்க்கினியே, இப்ப மட்டும் கோயிலுக்கு உள்ளாண்டை வுடமாட்டேங்கிறியே?

– இன்னன்னா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பிய சஞ்சிகைகள் தொடர்பாக . . .



தூண்டில் இல.53+54இல் ஐரோப்பிய சஞ்சிகைகள் தொடர்பாக மு.நாகேந்திரம் எழுதிய கருத்துத் தொடர்பாக சில கருத்துகளை முன் வைக்கின்றோம்.

இன்று முற்போக்கென்று சொல்லும் எல்லோரையும் ஒரே அணியில் திரட்ட முடியுமா? இதிலிருந்தே முஸ்லீம் மக்கள் படுகொலை மற்றும் ஜனநாயக மீறலுக்கு எதிராக ஒருமித்துக் குரல் கொடுத்தல் என்ற பிரச்சினையைப் பார்க்கலாம். அரசுக்கும், புலிக்கும் எதிராக அனைவரும் ஒன்றிணைவது என்பது ஒரு போராட்டத்தில் சாத்தியமானதே. இது ஒரு ஐக்கிய முன்னணியாக மட்டும் இருக்கும். இவ் ஐக்கிய முன்னணி என்பது பரஸ்பரம் விமர்சனம், சுய விமர்சனத்தை அங்கீகரிப்பதன் ஊடாக மட்டுமே சாத்தியம்.

இன்று ஐக்கிய முன்னணி உருவாகக் கூடிய அரசியற் சூழ்நிலை இல்லை என்றே சொல்ல முடியும். ஏனெனில் கடந்தகாலப் போராட்டத்தின் அநுபவத்தில் இருந்து வெளியேறிய பலர் தனி நபர்களாகவோ, சிறு குழுக்களாகவோ சிதறியிருக்கும் இன்றைய நிலையில் பல கருத்துகளை அவர்கள் கொண்டுள்ளார்கள். மற்றும் தனிநபர் மீதும், அவர்களின் கடந்தகால நடவடிக்கைகளின் மீதும் மக்கள் முதற்கொண்டு தனிநபர்கள் வரை விமர்சனத்தைக் கொண்டுள்ளனர். இத் தனிநபர்கள் ஒன்றிணைய முன்பு அவர்கள் தொடர்பான விமர்சனம், சுய விமர்சனத்தைப் பகிரங்கமாகவோ, குறித்த நபர்களுக்கு இடையிலோ கோருவது தவிர்க்க முடியாதது. இவ் விமர்சனத்தைச் செய்யாதவரை ஐக்கிய முன்னணி என்பது சாத்தியம் இல்லை.

இன்று ஒரு சரியான அமைப்பு இல்லாத நிலையில் ஒவ்வொரு தனிநபரும் ஒரு அமைப்பை உருவாக்க முயலும்போது அவ் வமைப்புக்கான கருத்துகள் மீது கடுமையான விமர்சனம் அசியமானது. புலி, அரசு இரண்டுமே மக்கள் முன் முற்றாக அம்பலப்பட்டு இன்று பாலிலத்தை மட்டும் கொண்டு அதிகாரத்திலுள்ளன. இவற்றைத் தூக்கி எறிய ஒவ்வொரு தனிநபரின் கருத்தும் மையப்படுத்துவது தவிர்க்க முடியாதது. இக் கருத்துகளையும் மற்றும் அவர்களின் கடந்தகால அரசியல் கருத்துகளையும் கவனத்தில் எடுத்து விமர்சனம், சுய விமர்சனத்தைக் கோருவது தவிர்க்க முடியாதது. இவ்வாறு செய்யாத பட்சத்தில் மீண்டும் புதிதாக ஒரு புலியே உருவாகும்.

இந்த வகையில் நாம் வெளியிட்ட தனிநபர், சஞ்சிகைகள் மீதான விமர்சனத்தைப் பார்ப்போம். தனிநபர்கள் தொடர்பான விமர்சனங்கள் கருத்தியல், கோட்பாட்டு ரீதியானது. நாம் பகிரங்க விமர்சனத்தை வைப்பதற்கு முன் பல தடவை அந் நபர்களை அணுகிக் கதைத்தோம். நாம் எப்போதும் தனிநபர்கள் மீதான விமர்சனத்தைக் கருத்துகளுக்கு அப்பால் நின்று விமர்சிக்கவில்லை. கருத்துகளின் தன்மையையே அம்பலப்படுத்துகிறோம். சஞ்சிகையில் வெளிவந்த கருத்துகள் மீதான கருத்துகளைத் திரித்துப் புரட்டுவதையே திரிபுகள் என்கிறோம். இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு வரியாக எடுத்தே விமர்சித்தோம். அதற்கப்பால் வசனம் எப்படித் திரிக்கப்பட்டது எனச் சொல்லால் முத்திரை குத்தும் வகையில் பொதுப்படையாகச் சொன்னது கிடையாது.

நாம் முன்வைத்த விமர்சனங்கள் கருத்துகளை விட்டு விலகியிருப்பின் அதைச் சுட்டிக்காட்டினால் நாம் எப்போதும் திறந்த மனதுடன் சுய விமர்சனம் செய்யத் தயாராகவே உள்ளோம்.

எமது விமர்சனம் ஆரோக்கியமற்றது எனக் கருதும் யாரும் சமரசவாதியாக, புலிக்கும், அரசுக்கும் எதிராக மட்டுமே ஐக்கிய முன்னணி எனக் கோருபவர்களே. அப்படி உருவாகும் அமைப்பு வடிவம் இன்னொரு புலியையே உருவாக்கும். இன்று பல திரிபுகளைக் கொண்டு உள்ளிருந்தே மீண்டும் பழையதை உருவாக்கும் அபாயம் உள்ளது. இதைச் சோவியத் முதல் சீனா வரை பார்க்கலாம். ஆகவே அனைத்துக் கருத்துகளும், கடந்தகால அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் விமர்சிக்கப்பட வேண்டும். அது எதுவோ அதன் பெயர் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும். சுய விமர்சனத்திற்கும், விமர்சனத்திற்கும் அஞ்சாமல் யார் அவைகளை எதிர் கொள்ளுகின்றார்களோ அவர்கள் ஐக்கிய முன்னணிக்குள் மிக வேகமாக வருவார்கள். யார் அஞ்சுகிறார்களோ அவர்கள் மட்டுமே விமர்சனம் தொடர்பாக கருத்தியல் ரீதியில் பதில் அளிக்காமல் பீதியிட்டு கூச்சல் போடுவார்கள்.

அதே தூண்டிலில் ஈழத்திலிருந்து வாசகர் " ....ளி" எழுதிய விமர்சனத்தை எடுப்போமாயின், அவரின் விமர்சனம் பல விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்த போதும் இறுதியில் தூண்டிலைவிட மனிதம் சில விடயங்களை பார்த்திருக்கிறது என்றதன் மூலம் தூண்டில் தொடர்பான விமர்சனமே அர்த்தமற்றதாகி விட்டது.

மனிதத்தின் அரசியல் நிலை என்ன? எதை வைத்து அறிவது? இன்று முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை, ஐக்கிய இலங்கை, புலிகளின் வர்க்க மூலம்.. இவற்றில் மனிதத்தின் கருத்து என்ன? என்று வாசகர்"...ளி" தெளிவாகச் சொல்ல வேண்டும். இல்லையெனில் தூண்டிலில் வெளிவரும் சில கருத்துகளை ஜீரணிக்க முடியாமல் எழுதியதாகவே இவ் விமர்சனம் அமையும். இவரின் விமர்சனம் என்ன நோக்கில் எழுதியிருந்தாலும் இதிலுள்ள உண்மைகளை தூண்டில் கவனத்தில் எடுத்து இனி, கருத்துகள் மீது சரி, பிழைக்கு அப்பால் தனது நிலையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

* சமர்

---

*'சமர்' எழுதியனுப்பிய கருத்தை அப்படியே பிரசுரிக்காமல் தனிநபர் மற்றும் சக சஞ்சிகை குறித்த சில விடயங்களை 'இருட்டடிப்பு'ச் செய்துள்ளோம். கரும் போக்கான விமர்சனத்தைப் பாஸிஸத்தின் மீதும், பாஸிஸத்திற்கு எதிரான சக்திகள் மீதும் ஒரே தட்டில் வைக்கும் போக்குடன் எமக்கு உடன்பாடில்லாமையே இந்த 'இருட்டடிப்பு'க் காரணம்.*

ஆ.கு



எங்களிடம் மிருக குணம் உருவாவதற்குக் காரணம் பாராளுமன்றத்தில் நாங்கள் அமரும் நாற்காலிகளுக்கு நான்கு கால்கள் இருப்பதே என எமது அரசவை நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். அதனால் உடனடியாக இரண்டு கால்களைக் கொண்ட கதிரைகளை இறக்குமதி செய்யவுள்ளோம் என்பதை பொதுமக்களுக்கு அறியத் தந்து மகிழ்ச்சியடைகிறோம்.

- ஸ்ரீ.சபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னொரு துரோகம் !

ஸ்ரீநிவாசன் முன்வைத்துள்ள யோசனைகள்:

இலங்கை அரசமைப்பின் ஒற்றையாட்சி முறையை சமஷ்டியாக மாற்றி அமைக்க வேண்டும். வடக்கு, கிழக்கை தனித் தனியாக அதிகாரப் பரவலாக்கல் முறையின் கீழ் கொண்டு வர வேண்டும்.

அவ்வாறான ஒவ்வொரு அலகுக்கும் ஒப்புக்கொள்ளப் பட்டபடி அதிகபட்ச அதிகாரங்களை அளிக்க வேண்டும்.

இனரீதியான அடித்தள அதிகார அமைப்புகளின் எல்லைகளை வரையறுக்க எல்லைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும்.

அவ்வாறான அடித்தள அமைப்பின் நியாயாதிக்க பரப்பிற்குள் கூடுமான வகையில் ஒரே இன சமூகத்தை அவர்களின் வதிவிட, விவசாய மற்றும் மேச்சல் தரை சொத்துக்களை கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு அலகிலும் முஸ்லீம்களின் பாதுகாப்பிற்காக விசேட அமைப்பு ரீதியான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

பாரதீனப்படுத்தாத அரசாங்க காணிகளை மாறுபட்ட சமூகங்களுக்கு மத்தியில் பங்கீடு செய்வதற்கு காணிக் கமிஷன் ஒன்றை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு அலகிலும் இனச் சமநிலையை 1971ஆம் ஆண்டில் இருந்ததைப் போல பேண வேண்டும். இதனை ஏற்கெனவே நடைபெற்ற எந்தவொரு சிங்களக் குடியேற்றத்தையும் எந்த வகையிலும் வெளியேற்றாமல் செய்ய வேண்டும்.

கடந்த காலத்தில் இனங்கள் புலம்பெயர்ந்த இடங்களில் அவற்றின் நில உடமையை மீண்டும் உறுதி செய்யும் வகையில் காணிப் பங்கீட்டுத் திட்டம் அமைய வேண்டும்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கவென இப்போது அரங்கிற்கு வந்திருப்பவர் ஸ்ரீநிவாசன். ஈ.என்.டி.எல்.எவ். சார்பில் பாராளுமன்ற உறுப்பினரானவர். ஆனால் இப்போது ஈ.என்.டி.எல்.எவ் எப்போதோ கட்சியிலிருந்து அவரை வெளியேற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.

ஏற்கெனவே 90 யூலை 11இல் யுத்தம் ஆரம்பமான பிற்பாடு, 85இல் திம்பு பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட நான்கு கோரிக்கைகளையும் கிடப்பில் போட்டுவிட்டு, தமது இருப்பிற்கேற்றவாறு 92 ஒகஸ்ற்றில் 7 தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 4 அம்சக் கோரிக்கைகளையும், தொண்டமான் முன்வைத்த யோசனைகளையும் எந்தச் சிங்களக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக தொண்டமான் நாட்டைப் பிரிக்க முனைகிறார் என்கிற பேரினவாதக் கூச்சல் தான் மேற்கிளம்பியது. அரசோ, தமிழர் கட்சிகளை தெரிவுக் குழுவில் "சீட்டாட" விட்டுவிட்டு தமிழ் மக்களுக்கு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராக யுத்தத்தை நடத்துவதில் மட்டும் அக்கறையாக இருந்து வருகிறது.

இந்த நேரத்தில்தான் கக்கட்டுக்குள் திட்டத்துடன் வந்து சேர்ந்திருக்கிறார் ஸ்ரீநிவாசன். அவர் திட்டத்தை வைத்ததுதான் தாமதம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு திட்டத்தை துணிச்சலோடு முன்வைத்ததாக ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உட்பட தென்னிலங்கைக் கட்சிகளும், பத்திரிகைகளும் பாராட்டத் தொடங்கி விட்டன. சிறுபான்மைக் கட்சிகளும், பிரதான பெரும்பான்மை அரசியற் கட்சிகளும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதானது நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த சமாதானம் நெருங்கி வந்து விட்டதை உணர்த்துவதாக அவை கூறுகின்றன. தமிழ் மக்களது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதுதான், அத் தீர்வு பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆசீர்வாதத்துடன் முன் வைக்கப்படக் கூடிய தீர்வாக இருக்க வேண்டும். அந்த வகையில் ஸ்ரீநிவாசனின் தீர்வு ஒரு பாய்ச்சல்தான் என்றெல்லாம் குரல்கள் பலமாகக் கேட்க ஆரம்பிக்கின்றன.

இதுவரை காலமும் முன்வைத்த தீர்வுகள் அனைத்தையும் ஆலோசனை என்றும், வெவ்வேறு சாட்டுகளைக் கூறியும் இழுத்தடித்து வந்த அரசும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீ.ல.சு. கட்சி ஜனநாயக மக்கள் கூட்டினூடாக இனப் பிரச்சினை தீர்வுக்காக முன்வைத்த யோசனைகளை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று அண்மையில் கூறிய ஸ்ரீ.ல.சு. கட்சியும் ஸ்ரீநிவாசனின் திட்டத்தை மட்டும் உடனடியாக ஆதரித்துவிட்டன மறுபேச்சில்லாமல்.



இவ்வாறு "எல்லோரும்" ஏற்றுக் கொள்வதாகக் கூறும் அந்த யோசனைகளில் அப்படி என்னதான் இருக்கிறது என்கிற கேள்வி யாருக்கும் எழக் கூடும். முதலாவது சமஷ்டி. இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பை சமஷ்டியாக மாற்றுவது பற்றியது.

இரண்டாவது வட-கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் தனித் தனியாக அதிகாரப் பரவலாக்கல் முறையின் கீழ் கொண்டு வருதல் பற்றியது.

இலங்கை அரசியலமைப்பின் ஒற்றையாட்சி முறையை மாற்றி சமஷ்டி அமைப்பை கொண்டு வருவதற்கான யோசனையும், அதனை ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க உட்பட எல்லாச் சிங்களக் கட்சிகளும் ஆதரித்திருப்பது இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வரலாற்றில் ஒரு மைல் கல் என்று யாரும் கூறினாலும் கூட அதற்கு அடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள வட-கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களும் தனித்தனியாக இருக்கும் என்பதானது மேலே சொன்ன சமஷ்டியை வெறும் மேற் பூச்சாக்கி விடுகிறது.

ஏனெனில் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்த காலத்திலிருந்து வட-கிழக்கை தமது பாரம்பரிய தாயகமாகவும், அது சுயாட்சி அமைப்பைக் கொண்டதாகவும், அதனது நிலப் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கோரி வந்திருக்கிறார்கள். குறிப்பாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினூடாக பேரினவாதிகள் வட-கிழக்கை துண்டாட முயற்சித்த போதெல்லாம் பலமாகக் குரல் எழுப்பி வந்திருக்கிறார்கள். அவர்களது குரலையும் மீறி அரச ஆதரவுடன் நடைபெற்ற குடியேற்றங்கள் அப் பகுதிகளில் தமிழர்களின் வீதாசாரத்தைக் குறைக்குமளவுக்கு மேற்கொள்ளப்பட்டதென்பது வேறு விடயம்.

ஆனால் தொடர்ந்த போரானது திட்டமிட்ட குடியேறங்களை நிறுவுவதிலும், நிலவும் குடியேறங்களை பாதுகாப்பதிலும் பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாக அரசுக்குச் சிக்கல்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்க ஆரம்பித்துள்ளது. அரசினால் திட்டமிட்ட குடியேற்றங்களுக்குப் போதுமான பணத்தை ஒதுக்க முடியவில்லை. நிறுவிய குடியேற்றங்களைப் பாதுகாக்க போதுமான படையினர் கைவசமில்லை. ஆக, குடியேற்றவாசிகள், புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியும், பொருளாதாரக் காரணங்களுக்காகவும் குடியேற்றங்களை விட்டுவிட்டு இடம்பெயர்ந்து வருகிறார்கள். உதாரணமாக அல்ல, வவுனியா மாவட்ட குடியேற்றங்களை குறிப்பிடலாம்.

இந் நிலையில்தான் வட-கிழக்கு துண்டிப்பின் பிரதான தந்திரோபாயமான சிங்களக் குடியேற்றங்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கும் வேளையில் அரசின் திணறலைத் தீர்க்கும் வகையில் மிக இலகுவாக சிக்கலைத் தீர்த்து வைத்து விடுகிறார் ஸ்ரீநிவாசன். அரசு திணறுவது எதிர்க்கட்சிகளுக்கும் தெரியும். தாம் ஆட்சியிலிருந்தாலும் - இப்போது எதைப் பேசினாலும் - இதே நெருக்கடியை எதிர் கொள்ள வேண்டும் என்பதை அவை உணர்ந்திருக்கின்றன.

ஆக, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் சிறந்த ஸ்ரீநிவாசனின் திட்டத்தை ஸ்ரீ.ல.சு.க.வும் ஆதரித்து விட்டது.

ஆனால், இந்தத் திட்டம் தொடர்பாகக் கொஞ்சம் துழாவியதில் கிடைத்த தகவல்கள், ஸ்ரீநிவாசன் தானாக இந்தத் திட்டத்தை முன்வைத்தாரா? அல்லது இதற்குப் பின்னணியில் யாராவது முடுக்கி விடப்பட்டுள்ளனரா? என்கிற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

வட-கிழக்கில் படையினருடன் சேர்ந்து ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி போன்ற இயக்கங்களின் உறுப்பினர்கள் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வவுனியா, தீவுப் பகுதிகள் போன்ற இடங்களில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தெரிந்த விடயம். அவர்களூடாக இவ்வியக்கங்களின் தலைமைகளுக்கு இராணுவத்துள்ளிருக்கும் அபிப்பிராயங்கள் வந்து சேருகின்றன. "வடக்கை இனி ஒன்றும் செய்ய முடியாது. கிழக்கையாவது காப்பாற்ற வேண்டும்" என்றும், "வடக்கிலிருந்து படையினரை எடுத்து கிழக்கில் போட்டு, கிழக்கிலிருந்து புலிகளை ஒழித்துவிட்டு கிழக்கில் தேர்தலை வைக்கலாம்" என்றும். "கிழக்கைத் தனியாக எடுக்காமல் இன்னமும் வட-கிழக்கு இணைப்பு என்று கத்திக் கொண்டிருப்பதில் ஒரு பிரயோசனமும் இல்லை" என்றும் இந்தத் தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களுக்கு படையினரின் இவ்வபிப்பிராயங்கள் உட்செலுத்தப்படுகிறது. மறுபுறத்தே கருத்தியல் மட்டத்தில் இந்த அமைப்புகளின் தலைமைகள் கிழக்கையாவது கைப்பற்றுமாறு அரசுக்கு தமது புத்திகளை விற்ற புத்திசீவிகளால் மூளைச்சலவை செய்யப்படுகிறது. இந்த மூளைச்சலவையின் விளைவுதான் 7 கட்சிகள் முன்வைத்த 4 அம்சத் திட்டத்தையும் கிடப்பில் போட்டுவிட்டு இக் கோரிக்கையை முன்வைத்தது. இதற்கு அரசு இந்த தமிழ்க் குழுக்களின் உள்ளே இருந்த முரண்பாடுகளைப் பயன்படுத்தித் தன்பக்கம் வென்றெடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.





ஆக, திம்பு பேச்சுக்களின் போது தமிழ்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து வைத்த திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத இந்திய அரசு தமிழ்க் குழுக்களிடையே உடைவை ஏற்படுத்தி தனது நிலைப்பாட்டைச் சாதித்துக் கொண்டது. அன்றிலிருந்து தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்க ஆரம்பித்த இந்தத் தமிழ்க் குழுக்கள் இப்போது இந்த ஸ்ரீநிவாசனின் திட்டத்தை ஆதரிப்பதனூடாக இன்னொரு துரோகமிழைக்கப் போகின்றனவா?

* சந்திரா (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒண்ணாயிருக்கக் கத்துக்கணும்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் தமிழ்ப்படம் ஒன்றைப் பார்த்தான். படத்தின் பெயர் "ஒண்ணாயிருக்கக் கத்துக்கணும்". நடிகர்கள் சிவகுமார், மனோரமா, விஜுசக்கரவர்த்தி, கவுண்டமணி, செந்தில், சார்லி, எஸ்.எஸ்.சந்திரன் என்று ஒரு பட்டாளம்.

படிப்பறிவு இல்லாத மக்களைக் கொண்ட ஒரு கிராமம். அம் மக்களின் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்தி வெளியூரிலிருந்து மோசடிக்காரர்கள் வந்து ஏமாற்றி, சொத்துகளை அபகரிக்கிறார்கள். கிராமத்துப் பண்ணையாரோ அம் மக்களை நிரந்தரக் கூலிகளாகத் தனக்குக் கீழ் வைத்திருக்கிறார். இந்நிலையில் வெளியூரிலிருந்து ஒரு ஆசிரியர் அக் கிராமத்திற்கு வருகிறார். கைவிடப்பட்ட பள்ளியைப் பொறுப்பெடுத்துச் சீர்ப்படுத்துகிறார். கல்வியைக் கண்டு பயப்படும் பிள்ளைகளை குடிசை குடிசையாகப் போய் அழைத்து வந்து கல்வியூட்டுகிறார். பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்ப மறுக்கும் பெற்றோருக்கும் கல்வியின் அவசியத்தைப் புரிய வைக்கிறார். இது தனக்கு ஆபத்து எனத் தெரிந்து கொண்ட பண்ணையார் ஆசிரியருக்குத் தொல்லை கொடுக்கிறார். பெற்றோரையும், பிள்ளைகளையும் சூழ்ச்சியால் பிரித்து மோத விடுகிறார். இடையிடையே சிரிப்புக் காட்சிகள், காதல் காட்சிகள். படம் முடிவதற்குள் பண்ணையாரைப் பற்றித் தெரிந்துகொண்ட கிராம மக்கள் அவரைத் தண்டிக்க ஆவேசப்பட, ஆசிரியர் அவர்களைச் சாந்தப்படுத்தி பண்ணையாரை மன்னித்துவிடும்படி சொல்ல, பண்ணையாரோ தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்து கொள்கிறார். சுபம்!

இப்படியான கதையை ஏற்கெனவே எத்தனை படங்களில் பார்த்தாயிற்று என்று விக்கிரமாதித்தன் சலித்துக் கொண்டிருக்கும் போது, அவன் தோளை யாரோ பின்னாலிருந்து தட்டினார்கள். திரும்பிப் பார்த்தால் அங்கே வேதாளம் பல்லிளித்துக் கொண்டிருந்தது.

"ஆ.. நீயா? இங்கும் வந்துவிட்டாயா?"

"ஆம். நான்தான். உன்னை விட்டுக் கலைத்துக் கொண்டிருக்கும் அதே ஒறிஜினல் வேதாளம்தான். காலம் மாறிக் கொண்டிருக்கிறது அப்பனே. நீ கூட வாளை ஒளித்து வைத்துவிட்டு இங்கு வந்து `அசூல்' அடித்திருக்கும்போது, இந்த வேதாளம் உன்னுடைய வீட்டுக்கு வரப்படாதா?"

"சரி சரி. உடனே இந்த இடத்தைவிட்டுப் போய்விடு. றூம்மேற் வந்து உன்னைப் பார்த்தானென்றால் நானும் வீட்டைவிட்டு வெளிக்கிட வேண்டிவரும்"

"பயப்படாதே விக்கிரமாதித்தா. இந்த வேதாளத்திற்கு அப்படித் `திங்க்' பண்ணத் தெரியாதா. வேலை முடிந்து எல்பானில்' வீடு திரும்பிக் கொண்டிருக்கும் உன் நண்பனை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறேன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆ.. வேதாளமே"

"ஆத்திரப்படாதே விக்கிரமாதித்தா. தவறு என்னுடையதல்ல. உன்னுடையதுதான். நீ மீண்டும் தமிழ்ப்படம் பார்த்துவிட்டாய். அதனால் நான் உன்னிடம் கேள்விகள் கேட்டே ஆக வேண்டும். என்னுடைய கேள்விகளுக்கு நீ சரியான பதில் சொல்லாவிட்டால் உனக்கு விசா 'றினியூ' பண்ணமாட்டார்கள். அப்புறம் வேலை செய்ய முடியாமல் கை நீட்டிக் கொண்டு அலைவாய்"

"கேள்விகளைக் கேள்"

"நீ இப்போது பார்த்த படத்தில் உள்ள நல்ல அம்சம் என்ன?"

"அறியாமையால் மக்கள் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள் என்பதைக் காட்டி கல்வியறிவின் அவசியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆண்டாண்டு காலமாக மேல்தட்டினருக்கு தொண்டு செய்துவரும் கூலித் தொழிலாளர்கள் அதைவிட்டு சுய தொழிலுக்கு முயற்சிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது"

"இவற்றைச் சொல்லியிருந்தாலும் முக்கியமான ஒன்றைக் காட்டவில்லை. அது என்ன?"

"அடிமையாக நடத்தப்படுபவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதைக் காட்டவில்லை. அது மட்டுமல்ல, தங்கள் எதிரியை மக்கள் அடையாளங் கண்டு கோபப்பட்டபோது, அவர்களின் போர்க்குணாம்சம் மழுங்கடிக்கப்பட்டு, அஹிம்சையும், சமரசமும் போதிக்கப்படுகிறது"

"சீர்திருத்தக்காரராக வரும் ஆசிரியரைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"பண்ணையார் தனக்கு எதிராகச் சதி வேலைகள் செய்யும்போதெல்லாம் பண்ணையாரிடம் போய், நான் உங்கள் எதிரியில்லை, அப்படியிருந்தும் ஏன் இப்படி என்னை எதிர்க்கிறீர்கள் என்று ஆசிரியர் கேட்கிறார். அதாவது பண்ணையாருக்கு எதிராக யாராவது ஈடுபட்டால் அவர்களைப் பண்ணையார் அடக்கி ஒடுக்குவது சரி என்று மறைமுகமாகச் சொல்லுகிறார்"

"சினிமா என்பது இன்று முதலாளிகளின் கையிலுள்ள சாதனம் என்பதை எந்தக் கட்டம் காட்டுகிறது?"

"குறிப்பாக இறுதிக் கட்டம். படத்தின் இறுதிவரை கொடுமைக்காரனாகக் காட்டப்பட்ட பண்ணையார் இறுதியில் யார் முன்னும் மண்டியிடாத தன்மான வீரனாகக் காட்டப்பட்டு, தீயில் எரிந்து தியாகியாகிறான். இதைப் பார்த்த மக்களுக்கு அவன் மேல் உள்ள கோபம் மறைந்து போய் கவலை வந்துவிடுகிறது"

"இறுதிக் கேள்வி விக்கிரமாதித்தா. இந்தப் படத்தில் பெண்களின் பாத்திரம் என்ன?"

"வழக்கமாக எல்லாப் படங்களிலும் காட்டப்படுவது போலத்தான் இந்தப் படத்திலும் பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர். காதலிப்பதும், அழுவதுமே அவர்களின் வேலையாகக் காட்டப்படுகிறது. கொடுமைக்காரப் பண்ணையாரைத் தண்டிக்க கிராம மக்கள் திரண்டு வரும் போது குறுக்கே வந்து தாலிப் பிச்சை கேட்கும் பெண்மையாகக் காட்டப்படுகிறது"

விக்கிரமாதித்தனின் பதில்களால் திருப்தியடைந்ததோ என்னவோ வேதாளம் "கூல்" என்று சொல்லிவிட்டு ஜன்னலால் வெளியே போகவும், விக்கிரமாதித்தனின் நண்பன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வரவும் சரியாக இருந்தது.

* லட்சுமணா

---

*"கள்ளர் கூட்டு" கட்டுரைத் தொடரும்,*
*"சூரியப் பூச்சிகள்" கவிதைத் தொடரும்,*
*"கனவை மிதித்தவன்" கதைத் தொடரும்,*
*அடுத்த தூண்டிலிலிருந்து தொடரும்!*

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்திலிருந்து

# தேசத்தின் குறிப்புகள்

முன்பு நாம் எழுதியிருந்தது போலவே டென்சில் கொப்பேக்கடுவ குழுவினர் கொலையுண்டது இங்கு பெரும் புரளியைக் கிளப்பி விட்டிருக்கிறது. டென்சிலின் மனைவியாரும், எல்லோரையும் போலவே தனது கணவர் வஞ்சகமாகக் கொல்லப்படிருக்கலாம் என்று சந்தேகித்து, பிரிட்டனைச் சேர்ந்த ஒரு வெடிகுண்டு நிபுணரிடம் ஆலோசனை கேட்க, அவர் இக் குண்டு நிலத்திற்குக் கீழல்ல, மேலிருந்தே வெடித்திருக்கிறது என்று தெரிவிக்க, இதை எதிர்க் கட்சிகள் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அவசர அவசரமாக ஒரு பத்திரிகை மகாநாட்டை நடாத்த... அரச உளவாளிகள் இதை அறிந்து பிரேமதாசாவிடம் தெரிவிக்க, கொப்பேக்கடுவவின் மனைவியின் அறிக்கை பத்திரிகைகளில் வெளிவர முன்னரே, ஜனாதிபதி சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கத் தயார் என்று அறிவிக்க... மக்களுக்கு ஒரே குழப்பமாகிப் போய்விட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் ஒருபடி மேலே போய் கொப்பேக்கடுவவின் மனைவியிடம் " சார்க், ஐ.நா.சபை, கூட்டுச் சேரா அணி இவைகளில் எவற்றின் விசாரணைக் கமிஷன் தேவை என்று ஜனாதிபதி உங்களிடம் கேட்கச் சொன்னார்" என்று கேட்டு அதிர வைத்தார். ஆனால் இந்த அதிரடி ஒரு வெற்றுத் தோட்டாதான் என்றும், அப்படி ஒரு கமிஷன் இந்தச் சர்வதேச அமைப்புகளிடம் கிடையாது; சர்வதேச ரீதியாக சார்பற்ற தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு உருவாக்கப்படும் குழுவே சர்வதேச கமிஷன் என்று எதிர்க் கட்சிகள் வரைவிலக்கணம் கூற கொழும்பு மாநகரில் எங்கும் ஒரே குழப்பம்...

போதாக்குறைக்கு அரசாங்கப் பத்திரிகைகள் மீசையில்லாப் பிரபாகரன் டென்சில் கோஷ்டியைக் `கிளப்பி'யதற்காக தனது வீரர்களுக்குப் பரிசளிக்கும் படம் ஒன்றை `ஹொட் ஸ்பிறிங்'கில் கடன் வாங்கிப் பிரசுரித்துச் சாட்சிக்கு வைக்கவும் முயன்றன. ஏரிக்கரைப் பத்திரிகைகளைப் பார்த்தபோது, அரசாங்கம் தன்னைக் காப்பாற்ற பிரபாகரனையே சாட்சிக்குக் கூப்பிடவும் தயாராகி விட்டதோ என்று தோன்றியது. ஒரு வேளை சர்வதேச விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டால் மீசையில்லாப் பிரபாகரன் சாட்சி சொல்லப் `பந்தோபஸ்துடன்` அழைக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

எமக்கு இந்த இடத்தில் தோன்றிய சந்தேகம் இது தான்:

ஒன்று, அரசாங்கம் இந்த விடயத்தில் புலிகள் கூறியதை நம்புகிறது என்றால், வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது, ஹெலி ஒன்றை வீழ்த்தியது, திருகோணமலை ஆயுதக் கிடங்கை சிதைத்தது போன்ற புலிகளின் உரிமை கோரல்களையும் ஒப்புக் கொள்ளுமா என்பது.

இரண்டாவது, மக்களை விட்டுப் பிரிந்தும், இராணுவத்தினரின் சகாக்களாகி, கொழும்பு அகதி முகாம்களிலிருந்து இளைஞர்களைக் கடத்திச் சென்று தீவுப் பகுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர் முனைகளில் நிறுத்தி தமது விசுவாசத்தை மெய்ப்பித்தும், 'மக்கள் குரலை' நடாத்தியும் வரும் தமிழ்க் குழுக்கள் கொப்பேக்கடுவ மரணத்தில் புலிகள் இராணுவ லாபம் தேடுவதாகச் சாடியதை மறந்து போனதும், 'ஹொட் ஸ்பிறிங்'ஐ டெய்லி நியூசுக்குக் கையளித்ததும் எப்படி என்பது.

மூன்றாவது....

++ ++ ++



ஸ்ரீநிவாசன் அவர்கள் – ஒரு விபத்துப் போல பாராளுமன்றத்தில் எம்பியாக முக்தி பெற்றவர் – எப்படியோ திடீரென்று ஒரு சமாதான யோசனையை முன்வைத்தார். கண்ணை மூடிக் கொண்டே எல்லாப் பெரிய கட்சிகளும் அதை ஏற்றுக்கொண்டு விட்டன. காரணம் வேறொன்றுமில்லை. அவர் வடக்கு-கிழக்கைப் பிரித்து தனித் தனியாக்கி சமஷ்டி அரசை உருவாக்கலாம் என்று அரசுக்கு அறிவித்ததுதான்.

மங்கள முனசிங்காவின் இத்தனை நாள் முயற்சியையும் உடைப்பில் போட்டுவிட்டு இப்போது எல்லோரும் உச்சரிக்கின்ற ஒரே விடயம் ஸ்ரீநிவாசனது 'புறப்போலல்கள்'தான். நடைமுறைச் சாத்தியமும், யதார்த்தத் தன்மையும் கொண்டதாக வர்ணிக்கப் படுகின்ற இந்தப் 'புறப்போஸல்கள்' தமிழ்மக்களுக்கு இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வரப் போகிறதோ என்னவோ ஆனால் நிச்சயம் 'சமாதி' கட்டப் போவது உண்மை.

இது பற்றிச் சிங்களப் பாதுகாப்புச் சபை அறிவித்திருப்பது இதுதான்:

"இது தமிழன் இலங்கையைத் துண்டாடப் போடும் முதல் படி"

ஆனால் பாவம் சிங்களப் பாதுகாப்புச் சபைக்கு அதன் இனவாத வெறியின் வேகத்தில் நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை. உண்மையில் அந்த வசனம் இப்படித்தான் அமைய வேண்டும்: "இலங்கையில் தமிழரைத் துண்டாடப் போடும் முதல் படி இது"

++ ++ ++

எதிர்க் கட்சிகள் அண்மையில் ஒரு புதிய திட்டம் ஒன்றைப் போட்டன. அதாவது அரசாங்கத்திற்கு எதிராக தமது ஐக்கியத்தை வெளிக்காட்டும் 'மனிதச் சங்கிலிப் போராட்டம்'. இந்த



மனிதச் சங்கிலிப் போராட்டம் மானம் (அப்படி ஒன்று இருந்தால்!) போகிற விதத்தில் நடந்து முடிந்தது.

தொடக்கத்தில் தொடங்கிய பாத யாத்திரைப் போராட்டத்திற்கு இருந்த மக்களின் ஆதரவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து தற்போது மனிதச் சங்கிலிப் போராட்டத்தின்போது கையோடு கை கோர்க்க ஆட் போதாத நிலைக்கு வந்து சேர்ந்து விட்டது.

அரசுக்கு எதிராக உருப்படியான போராட்டம் எதையும் செய்யத் திராணியற்ற எதிர்க் கட்சிகள் இவை என்பது மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது போலும்.

யூ.என்.பி.யைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருந்தாலும் கூட "வீட்டுக்குள்ளே கை கோர்க்க முடியாத தாயும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகனும் வெளியே என்ன சாதிக்கப் போகிறார்கள்" என்பதில் அர்த்தம் உள்ளது!

++ ++ ++




1988இல், இன்றைய பிரேமதாசா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மறு நாளே இலங்கையை விட்டு ஓடியவர் றொனி டி மெல். பிரேமா மீது விமர்சனங்களை முன்வைத்த இவர் 'ஒக்ஸ்போட்டிலிருந்து வந்து விட்டால் மட்டும் போதாது, மக்களுக்குத் தேவை என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்' என்று பிரேமாவால் விமர்சிக்கப்பட்டவர். தனக்கு ஆபத்து வருமென ஓடிப்போன இவர் மீது இரண்டு மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகள் போடப்பட்டிருந்தன. இலங்கைக்கு வந்தால் இவரைக் கைது செய்யவும் ஒழுங்குகள் இருந்தன.

ஆனால் கடந்த இரண்டொரு மாதங்களில் நிலமை தலைகீழாக மாறியது. றொனியின் மனைவியார் மல்லிகா, அத்துலத் முதலி கோஷ்டியின் கட்சியிலிருந்து விலகினார். பிறகு றொனி இங்கு வருகிறார் என்று கதை வந்தது. சுப்பிறீம் கோர்ட் ஒரு வழக்கை தள்ளுபடி செய்தது. மறு வழக்கை அரசு வாபஸ் வாங்கியது.

றொனி டி மெல்லிற்கு வரவேற்பு அளிக்கும் விதத்தில் ஆளும் கட்சி ஆதரவுடன் பலத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இப்போது அவர் வந்து இறங்கி விட்டார்.

பைத்தியம் பிடித்தவருக்கு வைத்தியம் செய்வதற்குப் பதில் பூசாரியை மாற்றுகிற செப்படி வித்தை இதுதான்.

நேரத்துக்கு தக்க மாதிரி நிறம் மாறக் கூடிய ஒருவரைத் திரும்பப் பிடித்து இழுத்து அணைத்துக் கொள்கிறது யூ.என்.பி.

நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளைக் கூறித் திட்டப்பட்ட ஒருவர் ஒரு மாதத்தில் புனிதம் பெற்ற விந்தை இது.

"பில் கிளின்டன் காலத்தில் இவரும் ஒக்ஸ்போர்ட்டில் இருந்தவராம்!" என்று கிசுகிசுக்கள் வேறு உலாவுகின்றன.

நாட்டை வளம்படுத்தும் 100 ஆண்டுத் திட்டம் ஒன்றுடன் அவர் வந்திருப்பதாகப் பேசுகிறார்கள்.

மக்களை முட்டாள்களாக்கி, அவர்கள் முதுகில் சவாரி செய்வது இந்த அரசியல்வாதிகளுக்குத்தான் எவ்வளவு இலகுவில் சாத்தியமாகி விடுகிறது. போதாக் குறைக்கு கொழும்பு பத்திரிகைகள் வேறு இதற்கு ஆலவட்டம் பிடிக்கின்றன.

"உதிலை ஆச்சரியப்பட என்ன இருக்குது? உதை ஒரு விசயம் மாதிரிக் கதைக்கிறாய்" என்கிறார் நண்பர்.

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்? இது பெரிய விசயமில்லையே?"

"புரட்சி கதைச்ச பாலகுமார் புலியோடை சேரலாம் எண்டால், தயன் ஜயதிலக போலையாக்களுக்கு பிரேமாவின்ரை காலை நக்கலாம் எண்டால் உதிலை ஆச்சரியப்பட என்ன இருக்குது. பட்டால் அறிவான் சண்டாளன் என்பார்கள். பட்டும் தெளியாத எங்கடை கோதாரியளைப் பாரன். புளொட்டும், ரெலோவும், ஈ.பி.டி.பி.யும் இப்ப இங்கை நிக்கினம்? உவங்கடை சீலையில் அரசியலுக்கை உதை ஒரு விசயம் எண்டு கதைக்கிறாய். எல்லாம் பணமும், பதவியும்தான். மக்களைப் பற்றிக் கதைக்கினமோ அவை..."

* பிரஜைகள் (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எதிர்கால அவலங்கள்

உலகத்தின் எதிர்காலம்
என் கண்களில்
ஓலமாய் தெரிந்தது.

பசியின் தாண்டவம்.
மனிதனை மனிதன்
தலையில் கொத்தி
இரத்தத்தை உறிஞ்சி
சதையைத் தின்று
மயிரைப் பிடுங்கி
ஆடை ஆக்குகின்றான்.

ஓவென்று அழுதது.

கூனிக் குறுகி
எலும்புகள் குத்திட்டு நிற்க
ஊமைகளாய்...
குருடர்களாய்...
செவிடர்களாய்...
தவிக்கும் கூட்டம் ஒருபுறம்.

நிலவை விழுங்கி
நட்சத்திரத்தைத் தின்று
ஏப்பம் விட்டு
சூரியனைப் போட்டெரிக்க
குறிபார்க்கும் கூட்டம்
-ஒருபுறம்.

உலகம்
அழுது கொண்டிருக்கிறது
இயலாமையால்...

நானும்
ஒளியிழந்த கண்களால்
உலகத்தைப் பார்த்தபடி
இந்த
இருட்டு வீதியில்
இடறிடாமல்...

* ஆனந்த சுரேஷ்

## தேவை

பெண்ணே - உன்
புன்னகைக்குள்
வெம்மைகளையும்
புகுத்திக் கொள்;
புனிதங்கள்
புதைக்கப்படும்போது
புதுமைகளைச் சிருஷ்டிக்க
பயன்படும்.

உன் பாதங்கள்
மலர்கள் மீது
நடக்க வேண்டியவைதான்;
இதயம் சுதந்திரமாக
இயங்கும்போது!

நீ மொட்டுகளுடன் மலர்ந்த
அழகு மலர்.
ஆனாலும்
காயப்படுத்த மறந்து
கசங்கிப் போகிறாயே!

தனிமனித உணர்வுகளால்
தாயானவளே
பொதுமனித உணர்வுகள்
போலியாகையில்
மௌனங்களால்
களங்கங்களை
ஏன் சுமக்கிறாய்?

சேலைக்குள்
உன்னைத் திணித்துக்
கொண்டவளே,
உணர்வுகளையும்
திணித்து விடாதே.

தாலாட்டு
குழந்தையுடன் உன்னையும்
உறங்க வைத்தது
போதும்.
இனி - அது
தட்டியெழுப்ப வேண்டியது
பிஞ்சுகளின் உணர்வை
மட்டுமல்ல!

* விழி (ஈழம்)

## ஏன் எதிரிகள் ஆனோம் ???

பள்ளிப் பருவத்தில்
நண்பர்களாக நாம்.
ஆனால்
விடுதலைப் போராட்டம்
தொடங்கியபோது
நானொரு கட்சி,
நீயொரு கட்சி.

அன்று
இலக்குகள் ஒன்றுதான்.
இன்றோ
நீயும், நானும்
அவனையும், இவனையும்
என்னை நீயும்,
உன்னை நானும்
சுட்டாக வேண்டும்!

முதலில் எதிரி
அரசென முழங்கி
போராடச் சொன்னார்கள்.
போராடினோம்.
சமூக விரோதிகளுக்கு
மரண தண்டனை.
தண்டித்தோம்.
சிங்கள மக்களைச்
சுடு என்றார்கள்.
சுட்டோம்.
இந்த வரிசையில்
இன்று
என் இலக்கு நீ,
உன் இலக்கு நான்!

உனக்கும் எனக்கும்
விரோதங்கள் இல்லை.
யாருடையதோ
நலன்களுக்காக
நானும் நீயுமேன்
சுட்டுக்கொள்ள வேண்டும்

என்னையும், உன்னையும்
எதிரியாக்கிய தலைமையை
ஒழித்து
விடுதலைப் போரைத்
தொடர்வோம்,
வருகிறாயா?

* மனோகரன் (ஈழம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எவர் தர்மராஜா???

*எமன்:* என்ன எல்லா வழக்குகளும் இழுபறிப்படுகின்றனவே. இன்றைய சகுனம் சரியில்லாமல் இருக்குமோ? அடுத்த வழக்கை அழையுங்கள் பார்க்கலாம்.

*சித்தி:* தர்மராஜா சகுனம் பார்க்காதீர்கள். பூலோகத்தில்தான் நாள் நட்சத்திரம் பார்த்து செய் கையிலே கோட்டைவிட்டு விடுவார்கள். பத்மா பரமேஸ்வரன்! பத்மா பரமேஸ்வரன்!! பத்மா பரமேஸ்வரன்!!!

*எமன்:* என்ன மீண்டும் ஆணும் பெண்ணாக இருவரா? குடும்பமாக அழைக்கிறீர் போலும்.

*சித்தி:* தனியொருவர்தான் பிரபு. ஆனாலும் இறுதிக் காலங்களில் குடும்ப நலனுக்காக மட்டும் வாழ்ந்தவர். இப்போ எதிலிருந்தோம், என்ன செய்தோம் என்று தனது கொள்கையே தெரியாமல் குழம்பிப் போயிருக்கிறார் பிரபு.

*பத்மா:* ஒடுக்கப்பட்டவர்களின் ஒன்றிணைந்த போராட்டம், இறுதி வெற்றி ஈழமக்களுக்கே, பெண்விடுதலையை வென்றெடுப்போம், அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறி வோம், ஒன்றுபட்டுப் போராடுவோம், பாராளுமன்றம் பிரச்சார மேடைதான், இலங் கையரசுடன் கூட்டுச்சேர்தல் *(புலம்புதல்)*

*எமன்:* என்ன ஒன்றுடன் ஒன்று தெளிவில்லாமல் ஏதேதோ புலம்புகிறார். என்ன நடந்தது சித்திரகுப்தரே?

*சித்தி:* பிரபு, இவரையே நல்ல தலைவன் என்று நம்பி கட்சிக்காக உயிரையே பணயம் வைத்து உழைத்த பல ஆயிரம் இளம் சந்ததிகளை ஏமாற்றிவிட்டார் பிரபு. இவர் ராஜபோக வாழ்க்கை வாழ இளைஞர்களோ அவமானப்பட்டு, வேதனைப்பட்டு, வெதும்பிப் போயிருக்கிறார்கள் பிரபு.

*எமன்:* அதைவிட ஏதாவது..?

*சித்தி:* ஒன்றா, இரண்டா? அடுக்கிக்கொண்டே போகலாம் பிரபு. ஒன்றிணைந்த போராட்டம் என்று பேச்சுவார்த்தைகளோடு மட்டுமே காலத்தைக் கழித்த கொள்கை மறந்த வெற்றுத் தோட்டாக்கள் இவர்கள். உயிர் கொடுத்து, உணவு கொடுத்த நண்பரையே உயிரோடு புதைத்தவர் இவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*எமன்:* அப்படியானால் உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்தவர் என்கிறீர்.

*சித்தி:* இவர் மட்டுமல்ல தர்மராஜா, சேலை மாற்றுவதுபோல ஆளை மாற்றி காலத்துக்காலம் கூட்டுச்சேரும் கும்பல்கள் இன்னும் இருக்கிறது தர்மராஜா. அவர்களையும் அழைக்கட்டுமா?

*எமன்:* ஐயோ வேண்டாம் தர்மராஜா. இவருடைய கதையைக் கேட்டே குழம்பிப் போயிருக்கிறேன். இன்னும் மற்றவருடைய கதையுமா? வேண்டாம் வேண்டாம்!! என்னுடைய தலையே சுற்றுகிறது. பூலோகத்தில் மக்களை என்னபாடு படுத்தியிருப்பார். யாரங்கே இவரை இழுத்துச் சென்று உழண்டியில் கட்டித் தலைகீழாகத் தொங்கவிடுங்கள்.

*சித்தி:* பிரபு எனக்கொரு சந்தேகம். இப்போது தர்மத்தை யார் நிர்ணயிக்கிறார்கள்? நீங்களா அல்லது பூலோகத்திலேயே தர்மபிரபுக்கள் இருக்கிறார்களா?

*எமன்:* அதுதான் எனக்கும் விளங்கவில்லை சித்திரகுப்தா. அடுத்த விசாரணையை அழையுங்கள். நாட்டுநிலமை எப்படியிருக்கிறது பார்க்கலாம்?

*சித்தி:* செங்குட்டுவன்! செங்குட்டுவன்!! செங்குட்டுவன்!!!

*எமன்:* இவரென்ன சேரநாட்டு மன்னனா? கவிஞனா? பெயரே விநோதமாக இருக்கிறதே.

*காட்சியமைப்பு:* கவிஞர் பாடலைப் பாடிக்கொண்டு வருதல்.

*எமன்:* கவிஞர்தான். சந்தேகமேயில்லை. என்ன இவ்வளவு நேரமும் எதையோ பறிகொடுத்தவர் போல் வந்தவர் இங்கே பாட்டும் கூத்துமாக என்ன நடந்தது இவருக்கு?

*சித்தி:* பூமியில் சுதந்திரம் இல்லாது இருந்தவருக்கு இப்போ சுதந்திரம் கிடைத்திருக்கிறது பிரபு.

*எமன்:* என்ன இலங்கையில் சுதந்திரமில்லையா? 1948இலேயே வெள்ளையர்கள் சுதந்திரம் கொடுத்ததாக அல்லவா அறிந்தேன். எதற்காக இவர் இங்கு வந்திருக்கிறார்?

*சித்தி:* இவர் இங்கு வந்ததற்குக் காரணம் பேச்சுச் சுதந்திரம் இல்லாத நாட்டில் ஒழுங்காகத் தொழிலைக் கவனிக்காததுதான்.

*எமன்:* என்ன தொழிலை ஒழுங்காகக் கவனிக்கவில்லையா? அப்படியானால் கவிநயமில்லையா? எதுகை, மோனை, கற்பனைவளம் எதில் குறைவிட்டார்?

*சித்தி:* எதிலுமே குறையில்லைப் பிரபு. உண்மையை எழுதியதுதான் அவர் செய்த குற்றம்.

*எமன்:* என்ன உண்மையை எழுதுவது குற்றமா? பத்திரிகைச் சுதந்திரத்திற்குத் தண்டனையா? நம்பவே முடியவில்லையே?

*சித்தி:* இப்போது நிலமை தலைகீழாக மாறிவிட்டது பிரபு.

*எமன்:* என்ன அநியாயம். தீர்ப்பை எப்படித்தான் எழுதுவது? சரி சரி. அவருக்கு ஏடும், எழுத்தாணியும் கொடுத்து இஷ்டம்போல் உலாவ விடுங்கள். எங்கள் தலைமையை எழுதாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்க ஆணையிடுங்கள். என்ன ஒரே குழப்பமாக இருக்கிறதே. பூலோகத்தில் என்ன தான் நடக்கிறது? அவமானம்! அவமானம்!!

*சித்தி:* நாலாபக்கமும் ஆயுதங்கள் உயருகிறது தர்மராஜா. மக்கள் உணவுக்காய்ப் போராடி உயிரோடு ஊசலாடிக் கொண்டிருக்கிறார்கள் பிரபு.

*எமன்:* என்ன செய்கிறார்கள் என்று கேட்கவில்லை. ஏன் செய்கிறார்கள் என்று கேட்கிறேன்.

*சித்தி:* நான் சொல்கிறேன் என்று கோபிக்காதீர்கள். இங்கு இருக்கும்வரைதான் நீங்கள் கூடக் கேள்வி கேட்கலாம். பூலோகத்திலே இப்போது கேள்வி கேட்கும் சுதந்திர மெல்லாம் கிடையாது பிரபு.

*{ காட்சியமைப்பு: மக்கள் அவலம்.}*

*எமன்:* என்ன என்ன... குழந்தைகள், தாய்மாராக ஒரு பட்டாளமே எங்களை நோக்கி வருகிறதே. என்ன நடந்தது பூலோகத்தில் சித்திரகுப்தா?

*சித்தி:* பள்ளிவாசல்களிலும், பக்கத்துக் கிராமங்களிலும் நடந்த படுகொலைகளின் ஓலமது. ஒன்றாக வெட்டிக் கொல்லப்பட்ட பாவமறியாத மக்கள் இவர்கள்.

*எமன்:* என்ன அநியாயம். அப்படி என்னதான் நடந்தது?

*சித்தி:* காலாகாலமாக ஒன்றாக வாழ்ந்தவர்கள் காட்டிக் கொடுப்பவர்கள் என்று குற்றம் சுமத் தப்பட்டிருக்கிறார்கள். உயிர், உடமைகளுக்காக ஒன்றாகப் போராடியவர்களை இரண்டாக வெட்டிப்போட்டு விட்டார்கள் பிரபு...

*எமன்:* என்ன.. நம்பவே முடியாமல் இருக்கிறதே. தர்மம் எங்களையும் மிஞ்சி விட்டதோ?

*சித்தி:* கையில் ஆயுதம் வைத்திருப்பவர்கள் நியாயம் சொல்கிறார்கள். இப்போ உங்கள் செங்கோலுக்கு வேலையில்லைப் பிரபு.

*எமன்:* வாருங்கள் சித்திரகுப்தா நாம் சென்று பூலோகத்தைப் பார்த்து வருவோம்.

*காட்சியமைப்பு: எமதர்மராஜாவும், சித்திரகுப்தரும் பூலோகத்தைப் பார்வையிடுகிறார்கள்.*

*சித்தி:* பிரபு இதுதான் தெற்காசியாவின் பெரிய பேட்டை. பாரதநாடு என்று பெயர். இப்போ இங்கே மக்களைச் சுரண்டுபவர்கள் ஜனநாயக முறையில் மக்களாலேயே தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். இன்னும் சில கல் தொலைவில் தெற்கே நாங்கள் பார்க்க வந்த மாணிக்கநாடு ஸ்ரீலங்கா இருக்கிறது பிரபு.

*எமன்:* மாணிக்க நாட்டுக்கு ஈழம், இலங்கை என்றல்லவா பெயர்கள் இருக்கின்றன.

*சித்தி:* ஆமாம் பிரபு. இப்போது பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது. அன்றிலிருந்து துவங்கியது தான் ஒவ்வொரு வடிவாக மாறி இன்றுவரை மக்கள் உணவுக்கும் உயிருக்குமாகப் போராடுகின்றார்கள். இதோ பாருங்கள், இதுதான் தலைநகரம். அதுதான் தேயிலை யால் பொன்விளையும் பூம்பொழிற் சோலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமன்: ஆ.. என்ன.. சோலைக்குள் எலும்புக்கூடுகளாக என்னவோ கூடைகளோடு?

சித்தி: ஓ.. அவர்களையா கேட்கிறீர்கள்? தோட்டத் தொழிலாளர்கள் பிரபு. விமோசனமே இல்லாமல் உணவுக்காக மட்டுமே உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.

எமன்: சித்திரகுப்தா என்ன சிவப்பாக ஒரு நதி? அதிலே மக்கள் நீந்தி விளையாடுகிறார்களோ?

சித்தி: இல்லைப் பிரபு. உழைப்புக்கு உரமேற்றி, உணவுக்கு வழிசமைக்கும் களனி கங்கை. இப்போ நிறம் மாறி தென்பகுதி இளைஞர்களின் செந்நீராகப் பாய்கிறது தர்மராஜா. அங்கே மக்கள் நீந்தவில்லை. பிணங்களாக மிதக்கிறார்கள் பிரபு.

எமன்: என்ன! வடக்கு, கிழக்கு, தெற்கு எங்குமே கொலைதானா??

சித்தி: பதிலே சொல்ல முடியாத பாலிலம் கேள்விகளை வேட்டையாடுகிறது பிரபு. அவர் எதிரானவர் என்ற நினைப்பு வரும்போதே தீர்ப்பு கொலைதான் என்று முடிவாகிவிடும் பிரபு.

எமன்: பனை வளமும், புகையிலை வாசமும் கூடிய யாழ்குடா நாட்டின் இயற்கைக் காற்றுக்காகக் காத்திருக்கிறேன் சித்திரகுப்தா.

சித்தி: இதோ பாருங்கள் இடிந்திருக்கிறதே இதுதான் சங்கிலியன் கோட்டை. மன்னர் ஆட்சியை எண்ணி இன்று இருந்த சுதந்திரத்தையும் இழந்து தவிக்கும் தமிழர் வாழ் தலை நகரம்.

எமன்: என்ன கந்தக வாசம் மூச்சை அடைக்கிறதே? மக்கள் இன்னமும் இங்கு வாழ்கின்றார்களா? என்ன அங்கே வானத்தில் ரதங்கள் திரிகின்றனவே?

சித்தி: பிரபு அவை ரதங்களல்ல, குண்டு வீச்சு விமானங்கள் அவை. நொடிப் பொழுதில் முந்நூறு கிலோ நிறைக் குண்டுகள் கூட வீசும்.

எமன்: மக்கள் வாழ்வதற்கு இவ்வளவு போராட்டமா? அல்லது போராடுவதற்காகத்தான் வாழ்கிறார்களா? என்ன அங்கு எதற்காகவோ கூட்டமாகக் காத்திருக்கிறார்களே, ஏன்?

சித்தி: அவ்விடத்தில் பால் பெறுவதற்காகக் காத்திருக்கிறார்கள் பிரபு.

எமன்: அங்கே என்ன சீனப் பெருஞ்சுவர் போல் வளைவாக... யாழ்நகரிலும் அப்படி ஏதாவது இருக்கிறதோ?

சித்தி: அது பெருஞ்சுவரல்ல பிரபு. மக்கள் கியூவில் பங்கீட்டுப் பொருளுக்காகப் பரிதவிக்கிறார்கள். இதுதான் நாம் பார்க்க வந்த பூலோகம் பிரபு.

*காட்சியமைப்பு: துப்பாக்கி ஏந்திய வீரர்கள் இரு கரையிலும் நிற்கிறார்கள்.*

எமன்: யாரது அங்கே கிழிந்த உடை, நலிந்த மேனி, வாயில் பூட்டு, கையில் விலங்கு... என்ன கொடுமை இது. இவருக்கு ஏன் இந்த நிலமை?

சித்தி: ஓ.. அவரைக் கேட்கிறீர்களா? அவர்தான் ஜனனாயகம். இப்போது பல வருடமாக அவ

www.tamilarangam.net

ரது நிலை அதுதான் பிரபு. அதோ பாருங்கனேன். பச்சை இரத்தம் காயாமல் இறந்து கிடக்கிறானே.. இவன் உண்மைக்காகப் பாடுபட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்த பட்டதாரி. அவனுடைய கதியே இதுதான் என்றால் பாமர மக்களின் கதியை எண்ணிப் பாருங்கனேன்.

*எமன்:* இந்தக் கொடுமைகளுக்கு காரணம்தான் என்ன?

*சித்தி:* முதலில் ஜனனாயகத்தை புரிந்து கொள்கிற மனப்பக்குவம் ஒவ்வொரு தலமைகளுக்கும் வேண்டும்.

*எமன்:* வந்ததுதான் வந்தோம். ஜனனாயகத்தின் கட்டுக்களையாவது தகர்த்துவிடுவோமா?

*சித்தி:* வேண்டாம் பிரபு. மக்கள் அமைப்பு மாற்றங்களை மக்களே செய்யட்டும். முதலில் ஜனனாயகத்தைக் காப்பாற்றட்டும். பின் நாட்டைக் காப்பாற்றலாம். வாருங்கள் நாங்கள் வந்த சுவடே தெரியாமல் போய் விடுவோம்.

*காட்சியமைப்பு: மக்கள் சுதந்திரம் என்று கையுயர்த்த ஆயுதங்கள் தடுக்கின்றன.*
*( பாடல் ஒலிக்கின்றது )*

இன்றும் நமது - மண்ணில் பச்சை இரத்தம் பாய்கிறது.
உண்மை இழந்தவர் நாம் உள்ளத்தில் ஓர் வெறுப்பு.

நன்மை மடிந்து விழ தீயவர்க்கு மணிமகுடம்.
இந்த நிலையிலிங்கு எமக்கெங்கே வாழ்க்கை வளம்?

போகும் வழியறியா கால்கள் எங்கோ செல்கிறது.
உயிரை இழந்தவரின் உண்மை நிலை யார் சொல்லுவார்?

கொலைகள் மலிந்த இந்தப் பூமிக்கு யார் பொறுப்பு?
உண்மையைக் கொலை செய்து பார்ப்பவர்க்கு என்ன நினைப்பு?

காலங்கள் மாறுகின்ற நாளிலே தீர்ப்பிருக்கு.
மனிதர்கள் வாழுகின்ற வாழ்க்கைக்கு உயிரிருக்கும்.

தேவன்

*( இந்த நாடகம் 1991 கார்த்திகை மாதம் பாரதி கலைக்குழுவினால் சுவிஸில் மேடையேற்றப்பட்டது)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய ஆசிரிய குழு அறிமுகம்

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்.
கூடவே எமது புத்தாண்டு
வாழ்த்துகளும்.

இந்நாள்வரை உங்களுக்கு
நெருக்கமான 'கடலோடிகள்'
ஆற்றிவந்த தூண்டில் வெளியீட்டுப்
பணியை இப்போது
பொறுப்பேற்றிருக்கும்
புதியவர்கள் நாங்கள்.

பத்திரிகை உலகில், அறிவாலும்,
ஆற்றலாலும், அனுபவத்தாலும் நாம்
மிகச் சாமான்யர்கள்தான்.
ஆயினும் உங்கள்
அபிமானத்திற்குரிய தூண்டிலை
முடிந்தளவு சிறப்பாகவும்,
தரமாகவும் கொண்டுவர முடியும்
என்ற நம்பிக்கையுடன் இப்
பொறுப்பினை கடலோடிகளிடமிருந்து
ஏற்றிருக்கிறோம்.

உங்களது வழமையான
ஒத்துழைப்பும், ஆதரவும் இருக்கும்
என்பதில் எமக்கு அசைக்க முடியாத
நம்பிக்கை உண்டு.
அந்த நம்பிக்கையுடன்தான் இப்
பொறுப்பில் துணிச்சலுடன் கால்
வைத்திருக்கிறோம்.

எங்கள் நம்பிக்கையினைப்
பாதுகாப்பதன் மூலம் தூண்டில்
தனது வரலாற்றுப்பணியைச்
செவ்வனே ஆற்ற நீங்கள்
உதவவேண்டுமெனத் திரும்பவும்
திரும்பவும் கேட்டுக் கொள்கிறோம்.

* * *

இந்த இதழின் அமைப்பு
மாறுபட்டிருக்கிறது என்றபோதும்
தூண்டிலின் உள்ளடக்கங்கள் மாற்றம்
பெற்றுவிடவில்லை. விவாதங்கள்,
புதிய கருத்துகள், புதிய பார்வைகள்
என்பவற்றிற்கு வழமைபோல
தூண்டில் இடங் கொடுக்கும். திறந்த
விவாதங்களால்தான் புதிய தேவைகளை
இனங்கண்டு கொள்ளவும், சரியான
முடிவுகளைக் கண்டு கொள்ளவும்
உதவ முடியும் என்பதில்
எமக்கு நம்பிக்கையுண்டு.

பத்திரிகை என்ற முறையில் தூண்டில்
ஆசிரியர் குழுவும் இவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவாதங்களில் தமது கருத்துகளை முன்வைப்பது அவசியம் என்போரும், தூண்டிலின் கருத்து என்ன என்று கோருவோரும், தூண்டில் விவாதங்களை முடுக்கிவிட்டுவிட்டு, தன் அபிப்பிராயங்களைப் பற்றிப் பேசாமல் பிறகு 'பைலை' மூடிவிடுகின்றது என்போரும் இவை தொடர்பான எமது 'நிலைப்பாடு' என்ன என்று அறிய விரும்பக்கூடும்.

எமது தமிழ் சிறு பத்திரிகை வரலாற்றோடு தொடர்புடைய கேள்விகள்தாம் இவை. தமக்கென ஏதாவது ஒரு கருத்தைக் கொண்டவர்களே சிறு சஞ்சிகைகளை வெளியிட்டார்கள் என்பதால், அதுவே சஞ்சிகைகட்கான பண்பாக அர்த்தப்படுத்தப்படுவதாய்ப் போயிற்று. இவை தொடர்பான எமது கருத்துகள் - மன்னிக்க வேண்டும் - சற்று மாறுபாடானவை.

தூண்டிலில் வருகின்ற விவாதங்களை, பள்ளி மாணவர்களை விவாதிக்கவிட்டுவிட்டு பார்த்துக்கொண்டிருக்கும் ஆசிரியர் இறுதியில் முத்தாய்ப்பு வைத்தாற்போல் விவாதம் பற்றிய தனது அபிப்பிராயத்தைக் கூறி முடிவையும் கூறிவிடும் ஒன்றுபோல யாரும் பார்த்தால் அது தவறு. பத்திரிகையில் வெளிவருகின்ற கட்டுரைகள், விவாதங்கள் பத்திரிகையை விலைகொடுத்து வாங்குபவர்களால் மட்டுமல்ல, ஆசிரிய குழுவைச் சேர்ந்த எங்களாலும் படிக்கப்படுகின்றன என்பது முக்கியமானது. ஆசிரிய குழுவில் இருப்பதாலேயே நாம் எல்லாம் அறிந்த மேதாவிகள் என நினைத்துவிட முடியுமா என்ன? எமக்கு வெளியே எம்மைவிட அறிவாளிகள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில்தான் விவாதங்களை ஒரு பத்திரிகை ஒழுங்கு செய்கின்றது. மேற்சொன்ன பள்ளி ஆசிரியரின் கற்பிக்கும் மனோபாவத்துடன் அல்ல. ஒரு கட்சிக்கான பத்திரிகை வேண்டுமானால் தனது கருத்துகளை 'பரந்துபட்ட மக்களுக்கு' எடுத்துச் சென்று கல்வியூட்ட இந்த வழியைக் கையாள முடியும். ஆனால் தூண்டிலின் நிலமை அதுவல்ல. அது இன்னமும் இருக்கிற நிலை 'தேடல்' கட்டமே. எனவே எல்லா விடயங்களிலும் எமது கருத்தினை நாம் சொல்லத்தான் வேண்டும் என்று கோருவது சரியானதல்ல. ஏனென்றால் நாமும் இந்த விவாதங்களினூடாகத்தான் கற்றுக் கொள்கிறோம். விவாதங்கள் திசைமாறாமல் செல்வதில் அக்கறையுடன் செயற்படுவோம் என்பதை மட்டும் இப்போதைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

தூண்டில் உங்களது பத்திரிகை. அதன் நிறைகள் அனைத்துக்குமான பொறுப்பும் உங்களது. அதன் குறைகளுக்கான பொறுப்பு மட்டும் எம்மைச் சேர்ந்தது. எனவே உங்கள் இடையறாத தொடர்பு மூலமாக எங்களுக்கு வழிகாட்டுங்கள்.

* * *

இவ் வருடத்தில் மொத்தம் 8 தூண்டில்களும், 2 இரவல் தூண்டில்களும் வெளிவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

சனவரி 1993
கலம்: 55

முகவரி
THOONDIL
Sudasien Buro
Grosse Heim Str. 58
4600 Dortmund 1
Germany

சந்தா:
(6 மாதங்களுக்கு
தபாற் செலவுடன்)
உள்நாடு: 20,-டி.எம்
ஐரோப்பா: 22,-டி.எம்
பிற: 28,-டி.எம்

தபாற் கணக்கு இல.
308 074 100 46
Postscheckamt
Dortmund
BLZ 440 100 46




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்